விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-176)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 19 வெள்ளிக்கிழமை (04.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

## வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் பலருக்கு திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பலரிற்கு நேற்று முன்தினம் முதல் அதிரடி மாற்றங்கள் வடக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட இடமாற்றங்களில் தற்போதைய ஆளுநர் செயலக செயலாளர் எஸ்.சத்தியசீலன் கொழும்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அவரது இடத்திற்கு தற்போதைய உள்ள 23

## அரசியலமைப்பு 20ஆம் திருத்தம் விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)
இலங்கை அரசியலமைப்பு 20ஆம் திருத்தச் சட்ட மூலம் விசேட வர்த்த 23

## 20ஆவது திருத்தச் சட்டத்தில்
# பாராளுமன்றை ஒரு வருடத்தில் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம்

- இரட்டைக் குடியுரிமை கொண்டவர் எம்.பி ஆகலாம்.
- ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வயதெல்லை 30ஆகக் குறைப்பு.
- நீதிச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதி வசம்.
- பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் குறைப்பு.
- உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் பதில் நியமனங்களை ஜனாதிபதியால் வழங்க முடியும்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் 4½ வருடத்திற்கு பின்னரே பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

இதனை மாற்றி யமைத்து 20ஆவது திருத்தச் சட்டத்தில் ஒரு வருடத்திலேயே பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

20ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு குறைநிரப்பு வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளடங்கிய முக்கிய விடயங்கள் வருமாறு.

20ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபில், ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும் எனும் விடயம் நீக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு பேரவை 20ஆவது திருத்தத்தில் பாராளுமன்ற சபையாக மாற்றப்பட்டுள்ளது.

அரசியலமைப்புப் பேரவைக்கு நியமிக்கப்படும் பிரதிநிதிகளிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னைய அரசியலமைப்பு திருத்தத்தில் 23

## வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)
வவுனியா கூமாங்குளம் கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை நேற்றுக் காலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடல 23

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் தீ விபத்து

(பனிக்கன்குளம்)
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மின் இணைப்பு வழங்கப்படும் இடத் 23

## விக்னேஸ்வரனுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு
### கடவுச்சீட்டை பறிமுதல் செய்யவும் கோரிக்கை

(கொழும்பு)
தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் மீது சட்ட நடவடிக்கை 23

## ஹெரோயினுடன் கொக்குவிலில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் 530 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளு 23

## 19ஆவது திருத்தத்தை ஒழித்தால் கூட்டமைப்பு அதனை எதிர்க்கும்
### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
19ஆவது திருத்தத்தை ஒழித்தால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அதனை எதிர்க்குமென 23

## 13ஆவது திருத்தத்தால் உருவாக்கப்பட்ட மாகாண சபையை ஒழிக்க ஜே.வி.பி ஆதரவு
### அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)
அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஒத்துழைப்பு நல்குவோம் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜே.வி.பியின் தலைவருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த அரசமைப் 23

## கஜேந்திரகுமார் வீட்டில் பணியாற்றிய தென்னிலங்கை தொழிலாளி
### வீட்டின் மேல் தளத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக அமைத்து 23

## நேற்று 10 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)
இலங்கையில் நேற்றைய தினம் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3111 ஆக அதிகரித்துள்ளது. 23

## புதிய அரசியலமைப்பு தயாரிப்பின்போது மாகாண சபை குறித்து கவனம் செலுத்தப்படும்
### அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில



(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வொன்றை வழங்கும் நோக்கிலேயே மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் அவை கடந்த இரண்டு வருடகாலமாக இயங்காத போதிலும், அதற்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து எந்தவொரு போராட்டங் 02

# கிளிநொச்சியில் விபத்து மூன்று பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர். இதில் ஒருவர் மேலதிக கிசிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக ஏ9 பிரதான வீதியில் பாரவூர்தி மற்றும் உந்துருளி விபத்துக்குள்ளாகியதில் உந்துருளியில் பயணித்தவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை கிளிநொச்சி டிப்போ வீதியில் புகையிரத நிலைய கடவைக்கு அருகில் முச்சக்கர வண்டி மற்றும் உந்துருளி விபத்தில் முச்சக்கர வண்டி குடைசாய்ந்ததோடு இரு பாடசாலைச் சிறார்கள் சிறு காயமுற்றுள்ளனர். (ம-03)

# இலங்கையில் கொரோனா ஆபத்து இன்னும் நீங்கிவிடவில்லை

## அரச தகவல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் ஆபத்து இன்னமும் நீங்கவில்லை என அரச தகவல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு அழைத்து வரும் இலங்கையர்களில் பெரும்பாலானோர் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

இதன் காரணமாக சமூக மட்டத்தில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக, திணைக்களம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு எச்சரித்துள்ளது.

இதனால் உரிய சுகாதார முறையை பின்பற்றுமாறு அரசாங்கம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 24 மணித்தியாலத்திற்குள் கொரோனா தொற்றாளர்கள் 9 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து இலங்கை வந்தவர்கள். இவர்களுக்கு மேலதிகமாக கடந்த செவ்வாய்க்கிழமை 43 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

## ஜனாதிபதி தலைமையில்

# முதலீடுகளை ஊக்குவிக்க அமைச்சரவை உபகுழு நியமனம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு ஏற்றவாறான நடைமுறைச் சாத்தியமான செயற்திட்டமொன்றை உருவாக்குவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சுபீட்சமான எதிர்காலம் என்ற திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தேசிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக வறுமையை ஒழித்து, அனைத்து மக்களும் பயனடையத்தக்க வகையிலான உயர் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை மேலும் விரிவாக்குவதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது.

அதனை முன்னிறுத்தி கொள்கை ரீதியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான செயற்திட்டம் தொடர்பில் ஆராயும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் முதலீட்டு விரிவாக்கம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த உபகுழுவில் பிரதமரும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ச அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, டளஸ் அழகப்பெரும, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விமல் வீரவன்ச, மகிந்த அமரவீர, எஸ்.எம்.சந்திரசேன, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் அலி சப்ரி ஆகியோர் உள்ளடங்குகின்றனர். அதேவேளை மேற்படி உபகுழுவின் செயற்பாடுகளுக்காக இராஜாங்க அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, ஜயந்த சமரவீர, திலும் அமுனுகம, டி.வி.சானக, நாலக கொடஹேவா மற்றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கிறது.

மேலும் கடந்த 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி அமைச்சரவையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கும் தேசிய வர்த்தகக் கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் உள்வாங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கும் அரசாங்கம், எனவே தற்போதைய சூழ்நிலைக்குப் பொருந்தக்கூடிய வகையிலான புதிய தேசிய வர்த்தக கொள்கைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. (ம-03)

## இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட

# ரூ. 6 கோடி பெறுமதியான மஞ்சள் பேருவளையில் மீட்பு

(பேருவளை)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக எடுத்துவரப்பட்ட ஆறு கோடி ரூபாய் பெறுமதியான 2230 கிலோ கிராம் மஞ்சள் பேருவளை கடற்கரையோர பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே நேற்று வியாழக்கிழமை குறித்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டதாக பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதன்போது பேருவளை கடற்கரையோர பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றிலிருந்து 90 மஞ்சள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் , அவற்றிலிருந்து 1070 கிலோ கிராம் மஞ்சள் கட்டிகளும் , 1160 கிலோ கிராம் மஞ்சள் தூளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர் குறித்த படகின் காவலாளராக செயற்பட்டு வந்துள்ளதுடன், இவர் முச்சக்கர வண்டியில் மஞ்சளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த போதே கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (ம-03)

# சபாநாயகர் மகிந்தயாப்பாவுடன் நோர்வே தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தனவை இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரீன யுரன்லி எஸ்கடேல் நேற்றுக் காலை சந்தித்தார்.

9 ஆவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக மகிந்த யாபா அபேவர்தன தெரிவு செய்யப்பட்டமைக்கு வாழ்த்துக்களை தெரிவித்திருந்ததுடன், பாராளுமன்ற இராஜதந்திரத்தின் முக்கியத்துவம் தொடர்பில் இவர்கள் கலந்துரையாடியிருந்தனர்.

எதிர்காலத்தில் பாராளுமன்ற அங்கத்தவர்களின் பகிர்வுகள் தொடர்பான பரஸ்பர நிலைபாடுகளையும் தூதுவரும் சபாநாயகரும் கலந்துரையாடியிருந்தனர்.

முன்னர் ஒஸ்லோ நிலையத்தின் நிகழ்ச்சித்திட்டமொன்றின் அடிப்படையில், இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நோர்வே பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்து, வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டிருந்ததுடன், அதனூடாக கைகோர்த்த செயற்பாடுகளை கட்டியெழுப்புவது தொடர்பில் நோர்வே கொண்டிருக்கும் செயன்முறைகள் பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. (ம-03)

## புதிய அரசியல...

களோ எதிர்ப்புக்களோ எழவில்லை என்பதால் புதிய அரசியலமைப்பு தயாரிப்பின் போது இதுகுறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கேள்வி : வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாணசபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. எனினும் நாடளாவிய ரீதியில் நீண்டகாலமாக மாகாணசபைகள் இயங்காமல் இருப்பதைக் காணமுடிகிறது. ஆகவே புதிய அரசியலமைப்பின் ஊடாக அவற்றையும் நீக்கிவிடலாம் அல்லவா?

பதில் : ஆம், உண்மையில் வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வொன்றை வழங்கும் நோக்கிலேயே மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் அந்த மாகாணசபைகள் கடந்த இரண்டு வருடகாலமாக இயங்காத போதிலும், அதற்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து எந்தவொரு போராட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்ப்புக்குரல்களும் எழவில்லை. ஆகவே புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் போது இவ்விடயங்கள் தொடர்பிலும் கருத்திற்கொள்ளப்படும்.

அதேபோன்று புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதென்பது அத்தனை இலகுவான விடயமல்ல. நாட்டின் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி, நீண்டகால நோக்கில் அது தயாரிக்கப்பட வேண்டும். முன்னைய அரசாங்கத்தினாலும் புதிய அரசியலமைப்பு வரைபைத் தயாரிக்கும் பணிகள் இடம் பெற்றன. ஆனால் அது ஒரு சமஷ்டி (பெடரல்) அரசியலமைப்பாகவே காணப்பட்டது. அதுவும் முன்னைய அரசாங்கத்தின் தோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்தது. எனவே அதுபோலன்றி, விசேட நிபுணர்கள் குழுவினால் நாட்டிற்குக் கேடற்ற விடயங்களை உள்ளடக்கியதாகப் புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும் என்றார். (ம-03)

## பாராளுமன்றை...

வாங்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதியாவதற்கான வயதெல்லை 35-இலிருந்து 30 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவும், கொள்கை வகுப்பு ஆணைக்குழுவும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளன.

தற்போதைய அரசியலமைப்பிற்கு அமைய பாராளுமன்றம் உருவாக்கப்பட்ட நான்கரை வருடங்களின் பின்னரே அதனை கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதியிடம் காணப்படுகிறது. எனினும், 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைய, பாராளுமன்றம் ஸ்தாபிக் கப்பட்ட ஒரு வருடத்தின் பின்னர் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகிறது.

இதேவேளை, பிரதமரை நீக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுவதாக 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் 30 பேர் என்ற வரையறை 20 ஆவது திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளது. (ம-03)

# தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக மாகாண சபை முறை தொடர வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறை தொடர வேண்டும் எனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் டி.யூ.குணசேகர வலியுறுத்தியுள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக ஒழிப்பதை ஏற்க முடியாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் தொடர்பான விவகாரத்தை பேசித் தீர்க்க முடியும் எனவும் அரசியலமைப்பை கட்டம் கட்டமாக மாற்றாது புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வரவேண்டும் எனவும் இந்தியாவின் தலையீட்டினால் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டாலும் அதன் நோக்கம் இன்னும் மாறவில்லை எனவும் அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தைக் கொண்டுவர எதிரணியில் இருந்து வாக்களித்த ஒரே எம்.பி. நான். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக இது முன் வைக்கப்பட்டது. இது முழுமையான தீர்வாக இல்லாவிட்டாலும் அதன் நோக்கம் முக்கியமானது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் மாற்றுக் கருத்துகள் உள்ளன. இந்த பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முடியும். இந்தத் திருத்தத்தின் பின்னணியைச் சிந்திக்க வேண்டும்.

கடந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலும் 13 ஆவது திருத்தத்தைத் திருத்த யோசனை முன்வைக்கப்பட்ட போது நான் உட்பட இடதுசாரி கொள்கையுள்ள அமைச்சர்கள் அதனை எதிர்த்தார்கள்.

நாம் அமைச்சரவையில் இல்லாத போதும் பங்காளிக் கட்சிஎன்றவகையில் 13 ஆவது திருத்தத்தைப் பாதுகாக்க குரல் கொடுப்போம்.

19 ஆவது திருத்தத்தில் உள்ள குழப்ப நிலை காரணமாக துரிதமாக அதனை மாற்ற அரசாங்கம் தயாராகிறது.

20 ஆவது திருத்தத்தை கொண்டு வரும் உடன் பாட்டுடனே கடந்த அரசில் 19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

19 ஆவது திருத்தத் தில் பல குறைபாடுகள் உள்ளன. அவை நிவர்த்திக்கப்பட வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ-2)

---

# பொதுமக்கள் பயணிக்க தடைசெய்யப்பட்டிருந்த புகையிரதக்கடவை மாற்றீடாக புதிய கடவை அமைக்க நடவடிக்கை

## பணிகள் இன்று ஆரம்பம்





(நெளுக்குளம்)

வவுனியா பன்றிக்கெய்த குளம் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் காரில் பயணித்த வெளிநாட்டு பிரஜைகள் உட்பட மூவர் உயிரிழந்த புகையிரதக்கடவையை மூடி அதற்கு அருகில் அதற்கு மாற்றீடான புதிய புகையிரத கடவை ஒன்றினை அமைக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடிவு எட்டப்பட்டு ள்ளதுடன் இன்று ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன .

ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது பன்றிக்கெய்தகுளம் புகையிரதக் கடவையில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கார் ஒன்றில் பயணித்த நான்கு வெளிநாட்டு பிரஜைகளில் மூவர் உயிரிழந்த குறித்த புகையிரதக்கடவை புகையிரத திணைக்களத்தினால் பொது மக்கள் பயணிக்க தடை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரிகள், ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது முன்னர் பொதுமக்களின் பயன்பாட்டிலிருந்த புகையிரதக்கடவையை மூடி புதிதாக அதற்கு அருகில் புகையிரதக்கடவை ஒன்றினை அமைப்பதற்கு அப்பகுதியிலுள்ள காணி உரிமையாளர் ஒருவர் தனது காணியை விட்டுக்கொடுப்பு செய்வதற்கு முன்வந்துள்ளார் .

அதற்கான புனரமைப்புப்பணிகள் இன்று மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (5-299)

---

# நல்லாட்சியின் யாப்புத் திட்டத்தில் சமஷ்டியாக பிரிப்பதற்கான விடயங்கள்

## அதனாலே 20 ஆவது திருத்தம் வருகிறது என்கிறார் கம்மன்பில



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட யாப்புத் திட்டத்தில் நாட்டை சமஷ்டியாகப் பிரிப்பதற்கான விடயங்கள் உண்டு. எனவே அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் அமைச்சரவையில் ஆராயப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் 3 வாரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்றத்தில் அங்கீகாரத்துடனே இது நிறைவேற்றப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

இந்தத் திருத்தத்திற்கு எதிராக எவராவது நீதிமன்றம் சென்றால்மேலும் 3 வார காலம் செல்லும். புதிய அரசியல் யாப்பு விரிவாக ஆராயப்படாமல் அரசாங்கம் ஒருபோதும் நிறைவேற்றாது.

சகல தரப்பினரும் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். புதிய அரசியல் யாப்பு வகுப்பது ஒருவிடயம். இதற்கு பிரசித்திபெற்ற யாப்பு சட்டத்தரணி ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவே இதனை ஆராயும்" என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

---

# 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை கருவிகள் நன்கொடை



(கொழும்பு)

கொகாகோலா நிறுவனம் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன இணைந்து 16 ஆயிரத்து 800 பி.சி. ஆர். பரிசோதனை கருவிகள் மற்றும் 17 ஆயிரம் வீ.ரி.எம். ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளது. குறித்த நன்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

கொவிட்-19 தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் 6 வைத்தியசாலைகளுக்கு இந்தப் பரிசோதனை கருவிகள் வழங்கப்படவுள்ளன. இந்தக் கருவிகளின் பெறுமதி ரூபாய் 50 மில்லியன் ஆகும்.

கொகாகோலா நிறுவனம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து கொவிட்-19 தொற்றாளர்களுக்காக இதுவரை ரூபாய் 130 மில்லியனை நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஒரே நாடு ஒரே சட்டமா?
# ஒரே சட்டம் ஒரே குடும்பமா?

## முஜிபுர் ரஹ்மான் விசனம்



(கொழும்பு)

**கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அர சாங்கம் 20ஆவது திருத்தச் சட்டத்தினைக் கொண்டு வந்து பாரதூரமான சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை விடுத் துள்ளார்.**

அமெரிக்க குடியுரிமை கொண்ட, தனது சகோதரரான, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பாராளுமன் றத்திற்கு கொண்டுவரும் நோக் கில் ஒட்டுமொத்த அரசியல மைப்பையே கோட்டாபய அர சாங்கம் மாற்ற முனைவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

17ஆவது திருத்தத்தை நாங்கள் கொண்டு வந்திருந் தோம். அதனை நிராகரிக்கும் வகையில் மகிந்த ராஜபக்ஷ தமது ஆட்சியில் 18ஆவது திரு த்தத்தைக் கொண்டுவந்து மூன்றுமுறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப் பத்தை ஏற்படுத்தினார்.

தற்போது 20ஆவது திருத் தச் சட்டம் வர்த்தமானியில் வெளியாகிய நிலையில் அத னூடாக கோட்டாபய அரசாங்கம் முழுமையாக கடந்த 2015ஆம் ஆண்டிற்கு முன் இருந்ததைப் போன்ற சர்வாதிகார ஆட்சியை நோக்கியே நகரப் போகின் றது.

19ஆவது திருத்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு சபையின் ஊடாகவே அனைத்து ஆணை க்குழுக்கள் உட்பட கட்டமை ப்புகளுக்கான தலைமைத்து வங்கள் நியமிக்கப்பட்டன.

ஆனால் 20ஆவது திருத் தத்தில் அந்தப் பிரிவு நீக்கப்பட்டு அதன் அதிகாரம் முழுவதும் ஜனாதிபதியின் கரங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

ஆகவே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத் தில் வீடு செல்லும் வழியில் நீதி யரசரை நியமித்ததைப் போல அரச கட்டமைப்பில் மாற்றங் களைக் கொண்டுவரும் சர்வா திகாரப் போக்கை இந்த அர சாங்கமும் கடைப்பிடிக்கப் போகிறது.

அதேபோல 19ஆவது திரு த்தம் நீக்கப்படும் அதே வேளை, இரட்டைப் பிரஜா வுரிமையை கொண்டிருக்கும் பசில் ராஜபக்ஷவை பாராளு மன்றத்திற்கு கொண்டுவரும் பிரயத்தனமே இதன் பின்னால் உள்ளது.

ஒரே நாடு ஒரே சட்டம் அல்ல, ஒரே சட்டம் ஒரே குடும்பம் என்கிற தொனிப் பொருள் தான் இன்று உள்ள தாக அவர் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார். (ஜ-4)

## பிரேமலால் ஜயசேகர விவகாரம்
## சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை ஏற்கமுடியாது
### பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி தொலவத்தை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வின் தீர்ப்பிற்குரிய வழக்கு தாரர்கள், பல்வேறு அரசியல் வாதிகளுடன் பேச்சுவார்த்தை களை மேற்கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டமையால் குறித்த கலந்துரையாடல்கள் வழக்கின் தீர்ப்பில் தாக்கம் செலுத்தியுள்ளதா? என்பது தொடர்பில் மீண்டும் விசார ணைகளை மேற்கொள்வது சிறந்ததாகும் எனப்பாராளு மன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேமநாத் சி தொலவத்தை தெரிவித்துள்ளார்.



மரண தண்டனை கைதி யான பிரேமலால் ஜயசேகர பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்துகொ ள்ள முடியாது என்ற சட்டமா அதிபரின் நிலைப்பாட்டினை ஏற்றுக்கொள்ள முடியாது என சட்டத்தரணி தொலவத்தை தெரிவித்த வேளையில் ஊடக வியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையி லேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

துமிந்த சில்வாவிற்கு வழங் கப்பட்டுள்ள தீர்ப்பும் இதனை போன்றதே. ஆகையால் இந்த விடயத்தில் எவ்வாறான நடவ டிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கப் போகின்றீர்கள் என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியிருந்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுடன் அந்த வழக்கின் தீர்ப்பினை அளித்த வழக்குதாரர்களின் கலந்துரையாடல்களை அடிப் படையாகக் கொண்டு நோக்கி னால் அந்த கலந்துரையாடல் கள் குறித்த வழக்கு தீர்ப்பில் தாக்கத்தை செலுத்தியுள்ளதா என்பது தொடர்பில் ஆணைக் குழு ஊடாக அல்லது மீண்டும் விசாரணைகளை மேற்கொள் வதன் மூலமோ அவரை குற்ற மற்றவர் என நிரூபிக்க சந்தர்ப் பங்கள் காணப்படுவதாக தொல வத்தை மேலும் தெரிவித்துள் ளார்.

இதேவேளை பாராளுமன்ற கட்டளைகளை சவாலுக்கு உட்படுத்த சட்டமா அதிபருக்கு முடியாது என அவர் சுட்டிக்காட் டினார். (ஜ-4)

## இரு விபத்துக்களில் 2 சிறுவர்கள் உட்பட மூவர் காயம்



(அக்கராயன்)

கிளிநொச்சியில் நேற்று முன்தினமும் நேற்றும் இடம் பெற்ற விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளனர். இச்சம்ப வம் தொடர்பில் தெரியவருவ தாவது,

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி வைத்தியசாலை க்கு முன்பாக ஏ-9 பிரதான வீதி யில் லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள் ளானதில் மோட்டார் சைக்கி ளில் பயணித்தவர் காயமடை ந்து கிளிநொச்சி மாவட்ட வைத் தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசா லைக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளார்.

இதேவேளை நேற்றுக் காலை கிளிநொச்சி டிப்போ வீதியில் புகையிரதக் கடவை க்கு ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் ஆட்டோ குடை சாய்ந்ததோடு இரு பாடசாலை சிறுவர்கள் காயமடைந்துள்ள னர். (ஜ-5-350)

## கண்டி மாவட்ட வாக்குகளை மீள எண்ணக்கோரி மனு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் அளிக் கப்பட்ட வாக்குகள் அனைத் தையும் மீள எண்ண உத்தர விடக்கோரி மஹாசன் பாலகய இயக்கத்தின் தலைவர் அமித் வீரசிங்க மேன்முறையீ ட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய் தார்.

நேற்று முன்தினம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. அமித் வீரசிங்க கண்டி மாவட் டத்தில் சுயேட்சைக் குழு 01 இல் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. (ஜ-4)

# இராசிபலன்

04.09.2020
ஆவணி 19, வெள்ளிக்கிழமை
துதியை பிற்பகல் 2.07 மணிவரை
உத்திரட்டாதி நள்ளிரவு 12.00 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சந்திராஷ்டமம் மகம், பூரம்
சித்தாமிர்தம், சுபமுகூர்த்த தினம்

வளவன்

**மேஷம்** – வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** – செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும்நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்** – மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்** – வாகனப் பழுது செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பொன்று பகையாகலாம், விரயங்கள் கூடும் நாள்.

**கன்னி** – குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணம் ஒன்று ஏற்படலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** – நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** – சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி கூடும் நாள்.

**தனுசு** – பெற்றோர் மீது பிரியம் கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மகரம்** – கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்** – கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** – குடும்பத்தினரிடையே முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்புக் கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

உன் கண்ணீரில் கூட ஒரு கம்பீரம் இருக்கட்டும்

# திருகோணமலையில் பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்



(திருமலை)
பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்களிலும் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 171 பேர் குறித்த நியமனங்களைப் பெற தகுதி பெற்றதுடன் 11 பிரதேச செயலகங்களிலும் 1109 பேர் குறித்த பயிலுநர் நியமனக் கடிதங்களைப் பெற்று தமக்குரிய பிரதேச செயலகங்களில் கடமைக்காக அறிக்கையிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு நியமனங்களை பெற்றவர்களுக்கான பயிற்சிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# விவசாயக் காணிக்குள் செல்லத்தடை திருகோணமலையில் பிக்கு அடாவடி

(திருமலை)
திருகோணமலை - குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திரியாய்க் கிராமத்தில் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வரும் ஆயிரம் ஏக்கர் காணிக்குள் செல்ல கிழக்கு தொல்பொருள் செயலணி உறுப்பினரான பிக்கு ஒருவர் தடை விதித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஆத்திக்காடு, நீராவிக் கண்டல், பள்ளப்பாவங்கை, பட்டாணிபாதி, பாவலங் கண்டல், கந்தப்பன் வயல் ஆகிய வயல் காணிகள் தொல்பொருள் சார்ந்த இடங்கள் என்பதாகக் கூறி இந்த முறை பெரும்போகச் செய்கைக்கு குறித்த விவசாயிகள் இறங்கினால் அனைவரையும் சிறையில் அடைப்பேன் என்று பிக்கு மிரட்டியுள்ளார். மிரட்டிய பிக்கு ஜனாதிபதியால் நிறுவப்பட்ட கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினர் ஆவார்.

பிக்குவின் இந்த மிரட்டலால் அச்சமடைந்த வயல் சொந்தக்காரர் தமது வயல்களுக்குச் செல்லாமல் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பிள்ளையான் வாக்குமூலம்

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்றையதினம் சுமார் 5 மணித்தியாலங்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இருந்து வெளியேறினார். (ஜ-4)



## தேங்காய்க்குள் ஹெரோயின் கடத்த முயன்ற ஐவர் கைது

(கொழும்பு)
தேங்காய்க்குள் மறைத்து வைத்து ஹெரோயின் கடத்த முயன்ற குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஐந்து சந்தேக நபர்களையும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மொராகாஹேனா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 500 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஐந்து பேரில் இரண்டு பெண்களும் உள்ளடங்குவர். (ஜ-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை கிருபகாந்தன் துயாளினி அவர்களின் அன்புக் கணவர்

திரு. **மாணிக்கம் கிருபகாந்தன்**

25.08.2020 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,
ஆசிரிய நலன்புரிக்கழகம்.

## துயர் பகிர்வு

**அமரர். நாகமுத்து தவராசா**

தோற்றம் 29.06.1948 | மறைவு 29.08.2020

திரு.த.காந்தரூபன் (ஆசிரியர், யா/கோப்பாய் மகா வித்தியாலயம்) அவர்களின் தந்தையார் அமரர்.நாகமுத்து தவராசா அவர்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள்.

# விவசாய சம்மேளனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு விவசாய சம்மேளனத்தின் காலபோக பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டம் நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் த.தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து விவசாய சம்மேளன அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மேளன செயலாளர் ந.கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார். (5-4)

# தெல்லிப்பழையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தினூடாக பிளாஸ்ரிக் அற்ற யாழை நோக்கிய பயணம் என்னும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட நகர்வாக தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை மையமாக கொண்ட பகுதியில் நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து அப்பிரதேசத்தின் வீதி ஓரங்களில் உள்ள பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பனவற்றை அகற்றும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

எனவே இச் செயற்பாட்டிற்கு சமூக ஆர்வலர்களையும் மற்றும் தன்னார்வ அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)




# கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்களை இழுத்தடிப்புச் செய்யக்கூடாது

## நகர சபை உறுப்பினர் வலியுறுத்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினர் கட்டட அனுமதிகளுக்கான விண்ணப்பங்களை இழுத்தடிப்புச் செய்யக்கூடாது என நகர சபை உறுப்பினர் க.சிவராசா வலியுறுத்தியுள்ளார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் , கட்டட அனுமதி தொடர்பில் பொதுமக்கள் நகரசபையிடம் அனுமதி கோரி நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை சாவகச்சேரி நகரசபையிடம் கட்டட அனுமதி தொடர்பில் 67 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதில் 16விண்ணப்பங்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீதி விண்ணப்பங்கள் சாவகச்சேரி நகரசபையின் ஆதனப் பகுதி, சபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர், சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுக்கு சிபாரிசுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதில் பெரும்பாலான விண்ணப்பங்கள் சாவகச்சேரி நகர சபைக்கு உள்ளே தான் சிபாரிசுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் பொதுமக்கள் கட்டட அனுமதி கிடைக்க தாமதமடையும் பட்சத்தில் நகரசபை மீதே குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே நகரசபை இவ்வாறான குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்து ஒரு கால வரையறைக்குள் அனுமதி வழங்க முயற்சிக்க வேண்டும்.

அத்துடன் கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்களை பொதுமக்கள் சமர்ப்பிக்கும் போது அதில் குறைபாடு காணப்படும் பட்சத்தில் அல்லது அனுமதி வழங்க முடியாத பட்சத்தில் அதற்கான காரணங்களை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)

# சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மருத்துவக் கழிவுகள்

(சாவகச்சேரி)

சரசாலை- குருவிக்காட்டுச் சூழலில் ஆங்காங்கே பெருந்தொகையான மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயநிலை காணப்படுகிறது.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையினரின் ஏற்பாட்டில் குருவிக்காட்டு பகுதியில் வீதியின் இருமருங்கும் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்ட போதே பெருந்தொகையான வைத்தியசாலைக் கழிவுகள் அவ்விடத்தில் கொட்டப் பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

ஒரே வகையைச் சேர்ந்த மருந்துப் போத்தல்கள் உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளே இவ்வாறு அவ்விடத்தில் இனங்காணப்பட்டன.

இருப்பினும் அவ்விடத்திற்கு வந்த சுகாதார வைத்திய அதிகாரி இம் மருத்துவக் கழிவுகள் அரச வைத்தியசாலையின் கழிவுகள் அல்ல என்பதனை உறுதிப்படுத்தினார்.

சமுதாயக் காடான குருவிக்காட்டு பகுதியில் இவ்வாறான மருத்துவக் கழிவுகள் பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் அச்சம் வெளியிட்டிருந்தனர். (5-4-30)



# உணவகம் மீது தாக்குதல்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இனம் தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட தாக்குதலில் கடையின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன. இவ் விடயம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(5-4-104)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி விரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.45 மணியளவில் அபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 6.15 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா இடம் பெறும். (5)



**மீள்குடியேற்றம் மற்றும் வீடமைப்பு தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமாகிய அங்கஜன் இராமநாதன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக உதவி அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், பிரதேச செயலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.**



**பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)**

# ஊ.சே.நி.மிகுதியை எஸ்.எம்.எஸ்.இல் அறியலாம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியின் தற்போதைய மிகுதியையும் அதுதொடர்பான தகவல்களையும் தத்தமது தொலைபேசிக்கு குறுந்தகவலாக மாதாந்தம் அனுப்பும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

"தேசிய அடையாள அட்டையை உள்ளீர்த்து, தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்படுத்தப்பட்டு வந்த திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது" எனத் தொழில் திணைக்கள ஆணையாளர் ஏ. விமலவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியின் தற்போதைய இருப்பு தொடர்பான தகவல்களை, மாதாந்தம் தத்தமது தொலைபேசிக்கு குறுந்தகவலாக அனுப்பும் வேலைத்திட்டத்துக்கான நடவடிக்கைகள் தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் "பி" அட்டை இல்லாத சந்தர்ப்பத்திலும் ஊழியர் சேமலாப நிதியை இதன்மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இளைஞர் விவகார அமைச்சகம் சுகததாச விளையாட்டு வளாகத்தில்



(கொழும்பு)

உலக வர்த்தக மையத்தில் இயங்கும் இளைஞர் விவகார அமைச்சகத்தை கொழும்பில் உள்ள சுகததாச விளையாட்டு வளாகத்திற்கு கொண்டு வர முடிவு செய்துள்ளதாக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையத்தில் இளைஞர் விவகார அமைச்சகத்தை நிறுவுவதற்கு மாதத்திற்கு 3.9 மில்லியன் ரூபா உதவித் தொகை செலுத்த வேண்டியிருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை நிபுணத்துவ விளையாட்டு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் அதிகாரிகளுக்கும் விளையாட்டு அமைச்சருக்கும் இடையே நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சுகததாச விளையாட்டு வளாகத்தில் இடம் உள்ளது. இளைஞர் விவகார அமைச்சகம் அங்கு கொண்டு வரப்பட்டால், ரூ .3.9 மில்லியன் சேமிக்கப்படும்" என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# 2 மீன்பிடிப்படகுகள் மீட்பு

(சிலாபம்)

சிலாபம்-இரணைவில் கடற்கரைப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த இரண்டு மீன்பிடிப் படகுகளை, சிலாபம் பொலிஸார் நேற்று அதிகாலை மீட்டுள்ளனர்.

மேற்படி மீன்பிடிப் படகுகளின் பதிவு இலக்கங்கள், கண்டறிய முடியாத வகையில் அழிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்த பொலிஸார் ஏதேனும் கடத்தல் சம்பவங்களுக்கு இதனைப் பயன்படுத்தியுள்ளனரா? என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றனர். (ஜ-4)

# குணமடைந்தோர் 2889

(கொழும்பு)

நாட்டில் மேலும் 6 கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோயாளர்கள் பூரணமாக குணமடைந்து நேற்று வீடுகளுக்கு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 889 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)


## வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக்கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கட்டடம் அமைப்பதற்கான கூறுவிலை கோரல்

வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக்கூட்டுறவுச்சங்கம், நீர்வேலியானது சங்கத்தின் பொதுச்சபைத்தீர்மானத்திற்கமைய புதிய வாழைக்குலை கொள்வனவு நிலையம் ஒன்றினை நீர்வேலிச்சந்திக்கு அருகாமையில் உள்ள தமது சொந்தக் காணியில் அமைப்பதற்கு பொருத்தமான கட்டட ஒப்பந்தகாரரிடம் இருந்து கூறுவிலையினை கோருகின்றது.

- கட்டடத்தின் அளவு -2400 சதுர அடி ( 60' x 40' )
- கூறுவிலை சமர்ப்பிப்பதற்கான இறுதித்தினம் -17.09.2020 நண்பகல் 12.00 மணிக்கு முன்
- விண்ணப்ப கட்டணம் - ரூபா 500.00
- மீளளிக்கத்தக்க வைப்புப்பணம் - ரூபா 20.000.00
- கட்டட ஒப்பந்தகாரரின் தகைமை **ICTAD – C 8** அல்லது அதற்கு மேல்

கட்டட ஒப்பந்தகாரர் ரூபா 2.5 மில்லியனுக்கு குறையாத ஒப்பந்த பெறுமதியினை உடைய ஆகக்குறைந்தது 02 வேலைகளை கடந்த 02 வருட காலத்துக்குள் செய்து முழுமையாக பூர்த்தி செய்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
விண்ணப்ப படிவத்தினையும் ஏனைய தகவல்களையும் சங்க அலுவலகத்தில் தினமும் காலை 6.00 தொடக்கம் 11.00 மணிவரை தினமும் பெற்றுக்கொள்ள முடியும்.
ஒப்பந்தகாரர் தம்மால் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலையுடன் கீழ்வரும் இதர ஆவணங்களையும் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

1. தனிநபர் அல்லது ஒப்பந்த நிறுவனம் தொர்பான விபரம்
2. **ICTAD** பதிவு சான்றிதழ் பிரதி
3. கூறுவிலைப்படிவம்
4. 02 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்த வேலை விபரம் (2.5 மில்லியனுக்கு மேற்பட்டது மட்டும்)

கட்டட ஒப்பந்த வேலை வழங்குவது தொடர்பில் சங்க இயக்குநர் சபையின் முடிவே இறுதியானது.

தொலைபேசி இல:
0779232462/0767111168

தலைவர்,
வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் நீர்வேலி.
(3779)



தட்டச்சு (ஆங்கிலம்) தேவை

நல்ல நிலையில் உள்ள தட்டச்சு இயந்திரம் தேவைப்படுகின்றது.

தொடர்பு: 0778535693 (C-228)



சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறு வனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத் திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center

0765684346 (C-1005)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 37 செவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: MBBS. Doctor<br>எதிர்பார்ப்பு: விஞ்ஞான பட்டதாரி.<br>தொ.இ: B/11151 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: செவ 2 இல<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்<br>தொ.இ: G/11187 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 32 ¾ செவ் 10 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Sc in QS.(UK)<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகள்<br>தொ.இ: B/11155 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: சூரி,செவ் 9 இல்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உள்ள மணமகன்<br>தொ.இ: G/11189 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 23 செவ் 3 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தொழில்நுட்ப உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11156 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 53 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.<br>எதிர்பார்ப்பு: சுயதொழில், மாத வருமானம் உடையவர்கள்.<br>தொ.இ: G/11193 |
| பிறப்பு: 1991 இந்து<br>el;rj;jpuk;: kpUfrPupLk; 4<br>fp.gh: 0 nrt; 8 ,y;<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11157 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: செவ 4 இல<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.Sc பட்டதாரி.<br>எதிர் பார்ப்பு:. பட்டதாரி. அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: G/11197 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சிங்களத் தலைவர்கள் விட்ட தவறுகளே எமது இளைஞர்களை ஆயுதமேந்த வைத்தது

(கிளிநொச்சி)

**ஆட்சியைத் தக்க வைக்கவும் ஆட்சியை பிடிக்கவும் சிங்கள அரசியல் தலைவர்கள் இனவாதத்தை கையில் எடுத்திருக்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



அக்கராயன் கிழக்கு மக்களுடனான சந்திப்பு நேற்று நடை பெற்றது. குறித்த சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுள்ள தற்போதைய அரசும் இப்போது எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் மிகப்பெரியளவில் இனவாதத்தை கக்கத் தொடங்கி இருக்கிறார்கள். அவர்கள் சிங்கள மக்களிடம் அதிக அளவில் யார் இனவாதக் கருத்துக்களை விதைக்கிறார்களோ அவர்கள் தான் ஆட்சியை பிடிக்க முடியும் என நம்புகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா பாராளுமன்றில் அண்மையில் தெரிவித்த கருத்தும் சிங்கள அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரின் கருத்துக்களும் இதையே புலப்படுத்துகின்றன.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் அவருக்கு தான் வாக்களித்தார்கள் என்பதை அவர் மறந்து செயற்படுகிறார். தமிழர்களே இந்த மண்ணினுடைய பூர்வீகக் குடிகள்.

விஜயன் வருகையின் பின்னரே இலங்கையில் சிங்களவர்கள் வருகை தந்தனர் என்பது வரலாற்று உண்மை.

சிங்களத் தலைவர்கள் விட்ட வரலாற்றுத் தவறுகளே எமது இளைஞர்களை ஆயுதங்களை ஏந்த வைத்தது. இந்த வரலாற்று தவறுகளை சிங்களத் தலைவர்கள் தொடர்ந்தும் விடாமல் இருக்க வேண்டும்.

அத்துடன் சிங்கள மக்களுக்கு உண்மை நிலைகளை சிங்களத் தலைவர்கள் கூறி அவர்களைத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5)

## சிங்கள கற்கைநெறிக்கு பதிவு செய்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தருக்கான 3 மாத கால சிங்களக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகப் பகுதியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண மும்மொழிக் கற்கை நிலைய பதில் பணிப்பாளர் பி.என்.சதர்ஷன் அறிவித்துள்ளார். (5)

## வவுனியாவில் மூன்று நாட்களில் 54.4 மி.மீற்றர் மழை பதிவாகியது

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த மூன்று நாட்களில் 54.4 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளதாகவும் மழையுடான காலநிலை தொடரும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா நிலையப் பொறுப்பதிகாரி தா. சதானந்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் சில இடங்களில் கடந்த மூன்று நாட்களாக ஆலங்கட்டி மழை பெய்ததுடன் இம்மழையுடனான காலநிலை இன்னும் மூன்று நாட்களுக்கு நீடிக்கும். அத்துடன் இவ்வாறான காலநிலையின் போது இடியுடன் கூடிய பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-250)

## ஹெரோயின் நுகர்ந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் கிழக்கு பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் நுகர்ந்து கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐந்து சந்தேகநபர்கள் கோப்பாய் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு பகுதியில் உள்ள ஆலய வளாகத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர்கள் கூடி நிற்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 210 மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டது. (5-8)

## 5 பிள்ளைகளுள்ள குடும்பங்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் ஆரம்பம்

(முறிகண்டி)

ஐந்து மற்றும் அதற்கு மேல் பிள்ளைகளை பெற்றெடுத்த குடும்பங்களிற்கு கரைச்சி பிரதேச சபையினால் மாதாந்தம் மூவாயிரம் ரூபாய் பெறுமதியான சத்துணவு வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பமான குறித்த வேலைத்திட்டத்தில் இதுவரை 9 பேர் மாத்திரமே தகுதி பெற்றுள்ளதாக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெவித்துள்ளார்.



இவர்களிற்கு ஒரு மாதத்திற்கு மூவாயிரம் ரூபாய் பெறுமதியான சத்துணவினை வழங்குவதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

ஒரு வருடத்திற்கு குறித்த சத்துணவு பொதிகள் பிரதேச சபையினால் வழங்கப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கலைவாணி தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், குடும்ப நல சுகாதார வைத்தியர் நிமால் கிஸ்ரோபன், குடும்பநல உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (5-100)





தேர்தல் காலங்கள், அதனை அண்டிய காலங்களில் செலவு செய்யப்படும் நிதியை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது பற்றியும் அது தொடர்பான மறுசீரமைப்பை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் CMEV அமைப்பினால் யாழ்.மாவட்ட கேட்போர் கூடத்தில் நேற்று வழங்கப்பட்டது. இதன்போது கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

## 248 கிராம் கஞ்சாவுடன் யாழ்.நகரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் 248 கிராம் கஞ்சாவுடன் 46 வயதுடைய குருநகரை சேர்ந்த நபர் ஒருவர் மதுவரி திணைக்கள அதிகாரிகளினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளிற்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த நபர் யாழ்.நகரப் பகுதியில் கஞ்சாவை விற்பனைக்குத் தயாராக மோட்டார் சைக்கிளில் மறைத்து வைத்திருந்த வேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த மதுவரித் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வடமாகாண மதுவரி உதவி ஆணையாளர் பிரபாத் ஜெயவிக்கிரமவின் வழிநடத்தலின் கீழ் யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரகுநாதன் தலைமையிலான அணியினரால் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கம்;
# அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்

## 20 ஆவது திருத்தம் குறித்து காவிந்த



(கொழும்பு)

**தனிக்குடும்பம் பாராளுமன்றத்தை ஆக்கிரமிக்கவே அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் இரத்து செய்யப்படவுள்ளது என்றும் 20 ஆவது திருத்தத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களை நீக்கியுள்ளமை எதிர்காலத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன சுட்டிக்காட்டினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வீழ்ச்சிடைந்துள்ள தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் எவ்வித திட்டங்களும் அரசாங்கத்திடம் கிடையாது. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

அதன் பின்னணியில் தான் 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. நாட்டு மக்கள் பயன் பெறும் விடயங்கள் 20 இல் குறிப்பிடப்படவில்லை. பாராளுமன்றத்தின் ஜனநாயகத்தை ஒரு குடும்பம் ஆக்கிரமிக்கும் ஏற்பாடுகள் மாத்திரம் மறைமுகமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

19 இல் உள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் இரத்து செய்யப்பட்டன. 2014 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தின் நிலைமை இரண்டாம் சுற்றாக தற்போது உருவெடுத்துள்ளது. அரசாங்கத்துக்கு பெரும்பான்மை ஆதரவை வழங்கிய மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை.

ஒரு குடும்பத்தின் தேவைக்காக நாட்டின் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்படுவது இந்நாட்டில் மாத்திரம் இடம் பெறுகிறது என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## எரிபொருள் களஞ்சியத்திற்கு புதிய தாங்கிகள் கொள்வனவு

(கொழும்பு)

கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய கட்டடத் தொகுதிக்காக 3 புதிய எரிபொருள் தாங்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்காக எரிபொருள் சக்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், இந்த செயற்பாட்டுக்காக தொளாயிரத்து 42.47 மில்லியன் ரூபாவை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த நிறுவனத்தின் ஊடாக எரிபொருள் களஞ்சிய தாங்கிகளைக் கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஜ-4)

## பாதிக்கப்பட்ட சுகாதார சிற்றூழியர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆட்சிக் காலத்தில் சுகாதார சிற்றூழியர்களாக நியமனம் வழங்கப்பட்டும் அந்த தொழில்வாய்ப்பில் உள்வாங்கப்படாத சுகாதார சிற்றூழியர்கள் தமது நியமனத்தை உறுதி செய்து தருமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு சென்று சிற்றூழியர்கள் கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனுடன் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது - நீண்டகாலமாக சுகாதார சிற்றூழியர்களாக பணிபுரிந்துவரும் நிலையில் கடந்த ஆட்சிக் காலத்தில் தமக்கு நியமனம் வழங்கப்படுவதாக கூறி நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததாக சிற்றூழியர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால் அந்த நியமனங்களில் பல்வேறு குளறுபடிகள் இருந்தமை தொடர்பில் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து அந்நியமனங்கள் நிறுத்தப்பட்டன.

இதனால் நீண்டகாலமாக சேவையை புரிந்துவந்த பல சிற்றூழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து அந்த சிற்றூழியர்கள் தமது நியமனத்தை உறுதி செய்து தருமாறு கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளரிடம் கோரியிருந்தனர்.

பாதிக்கப்பட்ட சிற்றூழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்ட கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் அது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனத்திற்குக் கொண்டுசென்று தீர்வுகளைப் பெற்றுத்தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தார். (5)

## நாட்டில் சீரற்ற வானிலை; ஆறுகளின் நீர் மட்டம் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக ஆறுகள் சிலவற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

அந்த வகையில் அத்தனகலுஓயா மற்றும் களுகங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக களுகங்கை பகுதிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பகுதிகளில் வாழும் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே நாட்டின் பல பாகங்களில் சில தினங்களுக்கு 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

## 20 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக ஆணைக்குழுக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை பல சந்தர்ப்பங்களில் சவாலுக்குட்படுத்தப்பட்டதால் இந்த அரசாங்கத்தில் 20 ஆவது திருத்தம் ஊடாக ஆணைக்குழுக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் இரத்து செய்யப்பட்டு 20 ஆவது திருத்த சட்டமூல வரைபுக்கு அமைச்சரவை அங்கீகாரம் முழுமையாக கிடைக்கப்பெற்றுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் இரத்து செய்யப்பட்டுள்ளமையை சிறந்த ஒரு விடயமாகவே கருத வேண்டும்.

ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

ஆணைக்குழுக்களுக்கு வரம்புக்கு மீறிய அதிகாரங்கள் வழங்கப்பட்டமையின் காரணத்தினால் அவை பொறுப்பற்றவாறு செயற்பட்டன.

20 ஆவது திருத்தத்தில் ஆணைக்குழுக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்படுதல் அவசியமாகும். ஆணைக்குழுக்களும் ஒரு தரப்பினருக்கு பொறுப்பு கூற வேண்டும்.

இல்லாவிடின் குழு சார் சர்வாதிகாரம் தோற்றம் பெறும் என அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## ஷானி அபேசேகரவின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

உண்மைக்குப் புறம்பான சாட்சியம் வழங்கியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர்கள் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு



10

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

(தொடரும்...)

மேலே குறிப்பிடப்பட்ட சட்ட ரீதியான ஏற்பாடுகளை மீளாய்வு செய்யும் போது, மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் நிறைவேற்றுப் பிரதானிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் நிறைவேற்றுச் செயற்பாடுகளை நிறைவேற்றக் கூடியதுடன் அது கட்டாயமாக்கப்படவில்லை. எனினும் பிரதேச சபைகள் தொடர்பில் அப்பொறுப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது அவ

> **மாநகர சபையில் நிரந்தரமாக நிர்வாகத்தை மேற்கொள்ளும் ஆணையாளர் பதவி காணப்படும்போது நகர சபை மற்றும் பிரதேச சபைகளில் அப்பதவி "செயலாளர்" ஒருவரால் நிறைவேற்றப்படுகிறது. மாநகர சபையாயின் மாநகர ஆணையாளரும், நகர சபை அல்லது பிரதேச சபையாயின் செயலாளரும் அரசாங்க பொதுச் சேவை அதிகாரிகளாக விளங்குவர். இப்பதவிகளுக்காகக் குறித்த சபை அமைந்துள்ள மாகாண சபை ஆளுநர் மற்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமனங்கள் வழங்கப்படுகின்றன.**

> **ஆணையாளர் அல்லது செயலாளர்களின் நிர்வாக உதவியுடன் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளூராட்சி தலைவர்களுக்கு உண்டு.**

தானிக்கப்படுகிறது.

### பிரதேச சபைத் தலைவர் பிரதான கணக்கியல் அதிகாரியாக செயற்படல் (ஏற்பாடு (4))

பிரதேச சபையொன்றின் கணக்கு உத்தியோகத்தர் (Accounting officer) தலைவர் / தவிசாளரேயாதல் வேண்டும். அத்துடன் இந்த விதிகளுக்கும் உள்ளூராட்சி அமைச்சரால் வழங்கப்படக்கூடிய அறிவுறுத்தல்களும் உட்பட்டு பிரதேச சபையொன்றின் நிதிசார் மற்றும் கணக்கிடல் தொழிற்பாடுகள் யாவும் அவருடைய பொது முகாமைத்துவத்தினதும் மேற்பார்வையினதும் கீழ் இருத்தல் வேண்டும். ஏற்பாடுகளாவன, வர்த்தமானியில் வெளியிட வேண்டும். நீதிமன்றத்தினால் வர்த்தமானி ஒரு

> **உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான முதல்வர் - தலைவர் சபையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் நிதி மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பிலான பாரிய பொறுப்பு உள்ளது.**

சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

### மேயர்/தலைவர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படல்

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான முதல்வர்-தலைவர் சபையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் கீழ்க்காட்டப்பட்டுள்ள அலுவல்கள் மற்றும் பணிப்பொறுப்புகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டும்.

I. வரவு-செலவுத் திட்ட அறிக்கை தயாரித்தல் தொடர்பான பொறுப்பு

ஒவ்வொரு ஆண்டிற்குமான வருடாந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையொன்றை சபையில் சமர்ப்பித்தல். இதனோடு ஏற்புடைய சட்ட ரீதியான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் - 211ம் வாசகம்

நகர சபைகள் கட்டளைச் சட்டம் - 178 (1)ம் உப வாசகம்

பிரதேச சபைகள் சட்டம் - 168 (1)ம் உப வாசகம்

II. குறைநிரப்பு வரவு-செலவுத் திட்டமொன்றை சமர்ப்பித்தல்.

எழுத்துமூல சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப. (பிரதேச சபைகள் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்) நகர முதல்வர்-தலைவரால் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறைநிரப்பு வரவு-செலவுத்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்படலாம். இதனோடு ஏற்புடைய சட்ட ரீதியான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் - 214ம் வாசகம்

நகர சபைகள் கட்டளைச் சட்டம் - 178(2) உப வாசகம்

பிரதேச சபைகள் சட்டம் - 168 (3) உப வாசகம்

III. செலவுத் தலைப்புகளிடையே நிதியை மாற்றுதல்

ஏதேனுமொரு ஆண்டுக்காலத்தில் தேவையொன்று தோன்றுமிடத்து, அவ்வாண்டுக்கென ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அல்லது ஏதேனும் குறைநிரப்பு வரவு-செலவுத் திட்ட அறிக்கையொன்றின் ஏதேனுமொரு ஆண்டின் கீழ் குறிப்பிடப்பட்ட செலவுகளைக் குறைத்தல் அல்லது அதிகரித்தல் அல்லது ஒரு ஆண்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை வேறு தலைப்புக்கு மாற்றம் செய்திட, நகர முதல்வர்-தலைவரால் முடியும். எனினும் அவ்வாறு செய்யும் போது, அவ்வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அல்லது குறைநிரப்பு வரவு-செலவுத் திட்டத் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மொத்த செலவின் அளவு மேற்படாதிருத்தல் வேண்டும். இதற்கு ஏற்புடையதான சட்ட ரீதியான ஏற்பாடுகள் பின்வருமாறு,

மாநகரசபைகள் கட்டளைச் சட்டம் - 216ம் வாசகம்

நகர சபைகள் கட்டளைச் சட்டம் - 179ம் வாசகம்

பிரதேச சபைகள் சட்டம் - 170ம் வாசகம்

IV. வரிப்பணம், குத்தகை மற்றும் அனுமதிப்பத்திர கட்டணங்களை விதிப்பதில் ஏற்புடைய பிரேரணைகளைச் சமர்ப்பித்தல்.

V. நகர ஆணையாளர்-செயலாளரால் வருமானங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

VI. காசு வங்கியில் வைப்புச் செய்யப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

VII. சேகரிக்கப்பட்ட பணம் உரிய முறையில் கணக்கு வைக்கப்படுகிறதா? என்பது தொடர்பில் மேற்பார்வை செய்தல்.

VIII. முரண்பாடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் விழிப்புடனிருத்தல் மற்றும் வெளிவரும் முறைகேடுகள் தொடர்பில், முறையான நடவடிக்கைகளை எடுத்தல்.

IX. வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளைத் தாண்டாதவாறு செலவுகளைத் தாங்கிக் கொள்வதில் பொறுப்புடனிருத்தல்.

X. பெறுகைக் கோரல்–விலை மனுக் கோரல், பிரதேச சபைகள் சட்டத்தின் 174ம் வாசகத்தில் மற்றும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40ம் வாசகத்தில் இதனோடு ஏற்புடைய சட்ட ரீதியான ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

XI. உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்

### உடன்படிக்கைகள்

உள்ளூராட்சி மன்றங்களை நிறுவும் கட்டளைச் சட்டங்களில் (பிரதேச சபைகள் சட்டம் நகர சபைகள் கட்டளைச் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்) காட்டப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப, நகர முதல்வர்-தலைவர் சபையின் சார்பில் உடன்படிக்கைகளில் உள்ளிட முடியும்.

**சட்ட ஏற்பாடுகள்,**

- மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் - 228 மற்றும் 229(2) உப வாசகம்
- நகர சபைகள் கட்டளைச் சட்டம் - 40ம் வாசகம்
- பிரதேச சபைகள் சட்டம் - 173ம்

> **உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்கு ஏற்ப, நகர முதல்வர்-தலைவர் என்பவர் சபையின் சார்பில் உடன்படிக்கைகளில் உள்ளிட முடியும்.**

மாநகர சபைகள் ஓராண்டினை விஞ்சாத காலப்பகுதிக்கான உடன்படிக்கையைச் செய்து கொள்ளல் மாநகர சபை ஆணையாளரது பணிகளில் ஒன்றாகும். இதன் பொருட்டு வரவு-செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் (மா.ந.ச 227). வேலை, சேவை அல்லது பண்டத்தை வழங்குவதற்கான கணக்கினை உருவாக்கிக் கொள்ள முடியும். (மா.ந.ச 228).

உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் முன்னராக பிணைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் பொருட்டு மாநகர சபை ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரப் பிரதிகளைச் சபைக்குச் சமர்ப்பித்து, வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் உடன்படிக்கையை சபை அங்கீகரிக்க வேண்டும். சபை அங்கீகரிக்காவிட்டால் அமைச்சரின் அங்கீகாரத்துடன் மாநகர பிதா உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள முடியும்.

XII. கணக்குகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பிலான பொறுப்பு

ஒவ்வொரு ஆண்டிற்கும் ஏற்புடைய வருமான மற்றும் செலவுக் கணக்குகளும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளூராட்சி மன்றத்தின் சொத்து மற்றும் பொறுப்புகள் காட்டப்படும் இருப்புப் பத்திரமொன்றும் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளரிடம் சமர்ப்பித்தல் நகர முதல்வர்-தலைவரிடம் அளிக்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

**சட்ட ஏற்பாடுகள்,**

- மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் - 218ம் வாசகம்
- நகர சபைகள் கட்டளைச் சட்டம் - 177(1) உப வாசகம்
- பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதிகள் - 161 மற்றும் 162

XIII. கணக்காய்வு தொடர்பிலான பொறுப்பு

சபைக் கொடுக்கல்-வாங்கல்கள், கணக்கீடு மற்றும் நிதி நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பில் கணக்காய்வாளரால் பரிசோதிக்கப்பட்டு சபையிடம் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய காலத்துக்குள் பதில் வழங்குதல் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளை சபை மயப்படுத்தல்.

XIV. வருடாந்த நிர்வாக அறிக்கையைத் தயாரித்து சபையில் சமர்ப்பித்தல்.

நகர முதல்வர்-தலைவரால் ஒவ்வொரு நிதியாண்டிலும் தமது நிர்வாகம் தொடர்பிலான விளக்க அறிக்கை, அவ்வாண்டில், சபை நிதியில் சேர்க்கப்பட்ட வருவாய்களின் மற்றும் அந்நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் தன்மை மற்றும் அளவைக் காட்டும் கூற்றொன்றுடனும் அந்நிதியாண்டு பூர்த்தி அடைந்ததன் பின்னர், இயன்றளவு விரைவாக தயாரித்து அவ்வறிக்கை மற்றும் கூற்றினை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதனோடு ஏற்புடைய சட்ட ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் - 218ம் வாசகம்
- நகர சபைகள் கட்டளைச் சட்டம் - 180ம் வாசகம்

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## பதினொன்றில் வருகிறது ராகு... பணவரவு திருப்தி தரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



### கடக இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் விரயஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், செப்டெம்பர் முதலாம் திகதி முதல் லாப ஸ்தானம் எனப்படும் 11ஆம் இடத்தில் இருக்கிறார். அது போல கேது பகவான் உங்கள் இராசிக்கு 5ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதே நாளில் வரப்போகின்றார்.

இதற்கிடையில் நவம்பர் 15 ஆம் திகதி மகர இராசிக்கு குரு செல்கின்றார். அப்பொழுது அவர் உங்கள் இராசியையும் 3, 11 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார். அதன்பிறகு டிசெம்பர் 26ஆம் திகதி மகர இராசிக்கு சனி செல்கி ன்றார். அப்பொழுது கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறும். 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி குரு, கும்ப இராசிக்குச் செல்கின்றார். அப்பொழுது உங்கள் இராசிக்கு 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்வையிடுகின்றார். இவற்றை அடிப்படையாக வைத்து ராகு-கேது பலன் களைப் பார்ப்போம்.

### வருமானத்தைப் பெருக்கும் ராகு

### பிள்ளைகளால் பெருமை தரும் கேது

பதினொராமிடமான இலாப ஸ்தானத்திற்கு வரும் ராகு, உங்களின்



சோகத்தை மாற்றி சுகத்தைக் கொடுப்பார். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். நட்டத்தில் நடந்த தொழில் இனி லாபத்தில் நடக்கும். வியாபாரத்தில் இதுவரை ஏற்பட்ட சரிவை ஈடு கட்டுவீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு வங்கிகளின் கடனுதவி கிடைக்கலாம். முன்னோர் வழிச்சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பும், வேலையில் இருப்பவர்களுக்குச் சுயதொழில் செய்யும் வாய்ப்பும் உருவாகலாம்.

பஞ்சம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீக சொத்து பற்றிய பிரச்சினை முடிவிற்கு வரும். விலகிச்சென்ற உடன்பிறப்புகள் ஒருங்கிணைந்து செயற்படத் தொடங்குவர். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியும், கல்யாண முயற்சி கருதியும் நீங்கள் எடுத்த முடிவு பலன் தரும். ஒரு சிலருக்கு படித்த படிப்பிற்கும், தொழிலுக்கும் சம்பந்தம் இல்லாத வேலை அமையும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, எண்ணங்கள் எளிதில் நிறைவேற வழிபிறக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகம் மற்றும் தொழிலில் உன்னத நிலை காணும் சூழ்நிலை உருவாகும். பூமிப் பிரச்சினை அகலும். புதிய சொத்துக்கள் வாங்குவது, வாங்கிய சொத்தை விற்பது போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப்பிரிவினை சுமுக மாக முடிய வழி பிறக்கும். அரசு வழி உத்தியோகத்திற்கு ஏற்பாடு செய்தால்அதில் வெற்றி கிடைக்கும்.

சாதாரண வேலையில் இருப்பவர்களுக்கு சம்பள உயர்வோடு கூடிய வேலை அமையலாம். அரசியல் மற்றும் பொது நலத்தில் உள்ள வர்களுக்கு நல்ல பொறுப்புகளும், உயர்பதவிகளும் கிடைக்கும்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

உங்கள் இராசிநாதன் சந்திரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, மனக்குழப்பங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். அதே நேரம் பணப்புழக்கத்திற்கு குறைவு ஏற்படாது. வேகமாகத் தொடங்கிய வேலையைப் பாதியிலேயே விட்டுவிடுவீர்கள். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்ய இயலாது. தைரியமும், தன்னம்பிக்கையும் இப்பொழுது உங்களுக்கு அதிகம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதப்படலாம். அதிகார வர்க்கத்தினரின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது. உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உட்கொள்வதன் மூலம் ஆரோக்கியச் சீர்கேடுகள் ஏற்படலாம், கவனம் தேவை.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, நற்பலன்கள் ஏராளமாக நடைபெறும். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு உண்டு. உங்களால் பலன் அடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர். ஆபரணங்கள் வாங்க சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பாராத நல்ல தகவலும் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புது முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

கேது பகவான் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அங்குள்ள கிரகங்களின் பாதசார அடிப்படையில் பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். அவற்றின் பலாபலன்களை பாதசார அடிப்படையில் நாம் அறிந்து செயல்பட்டால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது வரவும், செலவும் சமமாகவே இருக்கும். புதன், உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். சகோதர, சகாய ஸ்தானம் மற்றும் விரயஸ்தானத்திற்கும் அதிபதியானவர் புதன்.

எனவே அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இக்காலத் தில் உடன்பிறப்புகளால் ஒரு சில நன்மை கிடைக்கும். அவர்களின் இல்லத்தில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் சீராகும். இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் பற்றிச் சிந்திப்பீர்கள். வெளிநாட்டு முயற்சியில் எதிர்பார்த்த பலன் உண்டு. வாங்கிய கடனில் ஒரு




பகுதியைக் கொடுத்து மகிழ்வீர்கள். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவருடைய சாரத்தில் கேது வரும்பொழுது இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் எளிதில் வரலாம். உத்தியோக மாற்றங்களும், தொழில் மாற்றங்களும் கூட ஏற்படலாம். எந்த மாற்றங்கள்வந்தாலும் வந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் நிர்ப்பந்தம் ஏற்படும். மூன்றாம் நபரின் தலையீட்டால் குடும்பப் பிரச்சினைகள் கொடிகட்டிப் பறக்கும். இக்காலத்தில் நம்பிக்கைக்கு உரியவர்களிடம் கூட குடும்ப விடயத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது. துன்பங்களை விலை கொடுத்து வாங்குவது போல் ஆகிவிடும். கடின



உழைப்பும், கவலையும் அதிகரிக்கும் நேரமிது.

### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

குருபகவான், உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். எனவே இக்காலத்தில் ஓரளவு நற்பலன்களே நடைபெறும். உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கூட்டுத் தொழிலில் மாற்றம் ஏற்பட்டு தனித்து இயங்கும் சூழல் உண்டு. உத்தியோகத்தில் கூட விருப்ப ஓய்வில் வெளிவந்து நண்பர்களைக் கூட்டாக்கி தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். எது, எப்படி இருந்தாலும் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். மலைபோல் வந்த துயர் பனி போல் விலகியது என்று சொல்வீர்கள்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

இலாப ஸ்தான ராகுவால்வருமானம் திருப்தியாக அமையவும், பஞ்சம ஸ்தான கேதுவால்பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் கிடைக்கவும், இல்லத்து பூஜையறையில் சனிக்கிழமை தோறும், சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது. வாய்ப்பிருக்கும் பொழுது ஜெய ஆஞ்சநேயரை வழிபடலாம்.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். புதிய வாழ்க்கை அமையும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புகள் கைகூடி வரும். உடன்பிறப்புகளும், உடன் இருப்பவர்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். கடன் சுமை குறையும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். நேர்மறைச் சிந்தனைகளை மேற்கொள்வது நல்லது. செவ்வாய் விரதமும், அம்பிகை வழிபாடும் நன்மை தரும்.

(தொடரும்)




# இந்தியாவை உலுக்கும் கொரோனா எகிறியது தொற்றாளர்கள் எண்ணிக்கை

## ஒரே நாளில் 82 ஆயிரம் பேருக்கு தொற்று




(டில்லி)
இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் மட்டும் புதிய உச்சமாக 82 ஆயிரத்து 860 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 38 இலட்சத்து 48 ஆயிரத்து 968 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 26 பேர் இந்த வைரஸினால் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 67 ஆயிரத்து 486 ஆக அதிகரித்துள்ளது.

29 இலட்சத்து 67 ஆயிரத்து 396 பேர் இந்த வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்தத் தொற்றுக்கு உள்ளான 8 இலட்சத்து 14 ஆயிரத்து 86 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், அவர்களில் 8 ஆயிரத்து 944 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# கொரோனா தடு

# ட்ரம்ப் அறிவி

(வோஷி

கொரோனா

தயாராக இருக்க

ணங்களுக்கு ட்ரம்

பிறப்பித்துள்ளது.

கொரோனா வைரஸிற்கான தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் உலகின் பல்வேறு நாடுகள் களமிறங்கியுள்ளன. ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகள் கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கும் போட்டியில் முன்னிலையில் உள்ளன.

பல தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு அவை மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதனை செய்யும் முயற்சியில் பல நிறுவனங்கள் முன்னேற்றம்

# மோடியின் டுவிட்டர் தளம் மீது சைபர் தாக்குதல்

(டில்லி)
பிரதமர் நரேந்திர மோடியின் டுவிட்டர் தளம் மீது நேற்று வியாழக்கிழமை அதிகாலை சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் தனிப்பட்ட வலைத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள **narendramodi_in** என்ற டுவிட்டர் பக்கத்தை 2.5 மில்லியனுக்கும் அதிகமானோர் பின்தொடர்கின்றனர்.

குறித்த கணக்கு மீது அதிகாலை சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கிரிப்டோ கரன்சியை தாராளமாக நன்கொடை வழங்குமாறு போலிச் செய்தியொன்று பதிவிடப்பட்டுள்ளது. இந்த டுவிட்டுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளதாகவும் டுவிட்டர் தெரிவித்துள்ளது.



இது குறித்து கருத்து தெரிவித்துள்ள டுவிட்டர் செய்தித் தொடர்பாளர், 'நாங்கள் நிலைமையை தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம். இந்த நேரத்தில் கூடுதல் கணக்குகள் பாதிக்கப்படுவது குறித்து எங்களுக்குத் தெரியாது. குறித்த கணக்குகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார். (2)

# உலகெங்கும் விமான 5 இலட்சம் பேர் வேை

## ஆய்வில் தகவல்

(ஜெனிவா)
கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக உலகெங்கும் விமான சேவைகள் முடங்கியுள்ள நிலையில் இவ்வாண்டு இறுதிக்குள் இந்தத் துறை சார்ந்த சுமார் 5 இலட்சம் பேர் வேலை இழக்கக் கூடும் என பைவ் ஏரோ நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகெங்கும் விமான சேவைகள் துறைசார்ந்த சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் கடந்த 6 மாதங்களில் வேலை இழந்துள்ளனர்.

இந்நிலையிலேயே இவ்வாண்டு இறுதிக்குள் மொத்தம் 5 இலட்சம் பேர் வேலைகளை இழக்கக்கூடும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிறுவனங்கள், விமான உற்பத்தி நிறுவனங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய மறைமுக தொழிலாளர்கள் 25 ஆயிரம் பேரும் முறையாக அறிவிக்கப்படாத 95 ஆயிரம் வேலையிழப்புகளும் இந்த அரைமில்லியனில் அடங்குவதாக பைவ் ஏரோ நிறுவன துணை நிறுவனரான ரோலண்ட் ஹேலர் தெரிவித்துள்ளார்.

பல நாடுகளில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று பரவிவரும் நிலை

# காஷ்மீர் மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றம் அலுவலக மொழிகள் ஐந்தாக அதிகரிப்பு-அமைச்சரவை ஒப்புதல்



(காஷ்மீர்)
காஷ்மீரில் அடுத்த அதிரடி மாற்றமாக உருது, டோக்ரி, காஷ்மீரி, ஹிந்தி மற்றும் ஆங்கிலம் என 5 மொழிகளுக்கு மாநிலத்தின் அலுவல் மொழியாக அங்கீகரித்து மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அதிகாரமான 370ஆம் பிரிவு கடந்த ஆண்டு ஒகஸ்ட் 5ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டது.

அதன்பின்னர் அந்த மாநிலம் ஜம்மு காஷ்மீர், லடாக் ஆகிய இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் நடந்து ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில் மாநிலத்தின் அலுவல் மொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

காஷ்மீரில் தற்போது உருது மற்றும் காஷ்மீரி ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே அலுவல் மொழிகளாக உள்ளன. பிற மாநிலங்களைச் சேர்ந்த வால்மீகி உள்ளிட்ட சமூகத்தினர் காஷ்மீரில் குடியேற ஒப்புதல் அளித்து அண்மையில் சட்டம் கொண்டு வரப்பட்டதன் தொடர்ச்சியாக அடுத்த பெரிய நடவடிக்கையாக அலுவல் மொழிகளின் எண்ணிக்கை ஐந்தாக உயர்த்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் ஊடகங்களிடம் தெரிவிக்கையில்,

"ஜம்மு காஷ்மீர் அலுவல் மொழிச் சட்டம் 2020இற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்மூலம் ஜம்மு-காஷ்மீரின் அலுவல் மொழியாக உருது, டோக்ரி, காஷ்மீரி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய 5 மொழிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

காஷ்மீர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். (2)



# வெளிநாடு



## தடுப்பூசியை விநியோகிக்க தயாராகுங்கள்

## ...விப்பால் அதிர்ந்த உலக நாடுகள்



(...ாஷிங்டன்)

**...னா தடுப்பூசியை விநியோகம் செய்ய ...க்க வேண்டும் என அமெரிக்க மாகா ...ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி உத்தரவை ...து.**

அடைந்து வருகின்றன.

குறிப்பாக அமெரிக்கா கொரோனாவுக்கான தடுப்பூசியை கண்டு பிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. நவம்பர் 3 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளதால் அதற்கு முன்னதாக தடுப்பூசியை கண்டுபிடித்து மக்களுக்கு வழங்க ட்ரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

தேர்தலை கருத்தில் கொண்டு இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தும் முயற்சியில் ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சி செய்து வருகிறார். இந்நிலையில், அமெரிக்கா அரசின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் நாட்டில் உள்ள அனைத்து மாகாணங்கள், நகரங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் கொரோனாத் தடுப்பூசியை விநியோகம் செய்ய ஒக்டோபர் மாத இறுதி அல்லது நவம்பர் முதலாம் திகதிக்குள் மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளும் முழுமையாக தயாராக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவை தடுக்கும் பணியில் ஈடுபட்டுவரும் முன்கள பணியாளர்களும், வைரஸ் பாதிப்பு ஏற்பட அதிகவாய்ப்புகள் உள்ள பிரிவினர்களான மருத்துவம், பொலிஸ் தேசிய பாதுகாப்பு ஊழியர்கள், 65 வயதுக்கு அதிகமானவர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவினருக்கும் இந்தத் தடுப்பூசியில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது நவம்பர் முதலாம் திகதிக்குள் கொரோனாத் தடுப்பூசியை விநியோகம் செய்யத்தயாராக இருக்க வேண்டும் என மாகாணங்களுக்கு ட்ரம்ப் நிர்வாகம் சுற்றறிக்கை அனுப்பியுள்ள சம்பவம் அமெரிக்கா மட்டுமல்லாமல் உலக நாடுகளிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (2)

## பீஜிங்கிற்கான விமான சேவைகள் மீள ஆரம்பம்

(பீஜிங்)

அடுத்த மாதம் முதல் தாய்லாந்து, கம்போடியா, கிரீஸ், டென்மார்க், சுவீடன் மற்றும் கனடா உள்ளிட்ட எட்டு நாடுகளில் இருந்து பீஜிங்கிற்கு நேரடி விமான சேவைகளை மீண்டும் தொடங்குவதாக சீனாவின் விமான சேவைகள் ஒழுங்குமுறை ஆணையம் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் ஊடாக பீஜிங்கில் கொரோனாத் தொற்று அச்சம் ஏற்பட்டதால் கடந்த மார்ச் மாதம் முதல் பீஜிங்கிற்கான அனைத்து சர்வதேச விமானங்களும் ஏனைய விமான நிலையங்களுக்கு திருப்பிவிடப்பட்டன.

இந்நிலையில் நான்கு மாதங்கள் நீடித்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி 8 நாடுகளிலிருந்து விமானங்களை மீண்டும் நேரடியாக பீஜிங்கிற்கு அனுமதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் தொடர்ந்து பீஜிங்கிற்கு வரும் விமானங்களில் கொரோனாத் தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டால் மீண்டும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என சீன சிவில் விமான சேவைகள் ஆணையம் அறிவித்துள்ளது.

இதேவேளை, அனைத்து கனேடியர்களும் நாட்டிற்கு வெளியே எந்தவொரு அத்தியாவசிய பயணத்தையும் தவிர்க்க வேண்டும் என கனேடிய அரசாங்கம் கடந்த மார்ச் மாதத்தில் வெளியிட்ட பயண எச்சரிக்கை இன்னமும் அமுலில் உள்ளது.

அத்துடன், சர்வதேச நாடுகளின் பயணிகள் கனடாவுக்கு நுழைவதற்கான தடை செப்டெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் கனேடியர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டே வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என கனேடிய அரசு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2)

## ...ன சேவைகள் முடக்கம் ...வலை இழக்கக் கூடும்

யில் தொடர்ந்து பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் விமானப் பயணங்கள் தொடர்ந்தும் முடங்கியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் இதுவரை பதிவான விமானத் துறைசார் வேலை இழப்புக்களில் 80 வீதத்துக்கும் அதிகமானவை ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேசமயம் ஆசிய பசுபிக் நாடுகளில் இந்த எண்ணிக்கை நம்ப முடியாத அளவுக்கு குறைவாக உள்ளது என்றும் ஹேலர் தெரிவித்தார்.

ஒருவேளை ஆசிய நிறுவனங்கள் ஊழியர்களை வேலையைவிட்டு நீக்கத் தயங்கக்கூடும். சீனா மற்றும் பிற நாடுகள் ஆட்குறைப்பு பற்றிய தகவல்களைத் தெரிவிக்காமல் இருப்பதும் ஒரு பிரச்சினை எனவும் அவர் குறிப்பிட்டார். (2)

## ஆப்கானில் கண்ணிவெடித் தாக்குதல் மூவர் உயிரிழப்பு, ஒருவர் காயம்!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வீதியோரம் புதைத்து வைத்த கண்ணிவெடி வெடித்ததில் 3 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானின் நங்கார்ஹர் மாகாணம் பச்சேரகம் மாவட்டத்தில் வீதியோரம் பயங்கரவாதிகள் கண்ணிவெடியை புதைத்து வைத்திருந்தனர். நேற்றுக் காலை அப்பகுதி வழியாக பொதுமக்கள் நடந்து சென்றபோது திடீரென அந்தக் கண்ணிவெடி வெடித்துச் சிதறியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

கண்ணிவெடி தாக்குதல் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (2)

## முகக்கவசம் அணியாதவர்களை கண்டுபிடிக்கும் 'ரோபோ'

(அபுதாபி)

அபுதாபியில் உள்ள யாஸ் மால் வணிக வளாகத்தில் நவீன 'ரோபோ' காவலாளி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில் இணைக்கப்பட்டுள்ள கமரா மூலம் முகக்கவசம் அணியாதவர்களை கண்டுபிடித்து விடுகிறது.




அமீரகத்தில் புதிய தொழில்நுட்பங்கள் புதுமையாக அவ்வப்போது அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று தான் பிரமாண்டமான வணிக வளாகம் ஒன்றில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'ரோபோ' காவலாளி.

பொதுவாக வணிக வளாகங்களில் காவலாளிகள் பணியமர்த்தப்பட்டு கண்காணிப்பு மற்றும் இதர பணிகளை செய்து வருகின்றனர். அந்த பணிகள் அனைத்தையும் செய்யும் வகையில் தற்போது 'ரோபோ' காவலாளி பணியில் அமர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக 4 சக்கரங்களுடன் வணிக வளாகத்தை சுற்றி வரும் இந்த 'ரோபோ' காவலாளி பொதுமக்கள் நடமாட்டத்தை மிக நுட்பமாக கண்காணிக்கிறது. இதற்காக இதன் முகப்பகுதியில் 7 கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பொதுமக்களின் உடல் வெப்பநிலையை துல்லியமாக கண்காணித்து கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி விடுகிறது.

யாராவது முகக்கவசம் அணியவில்லை என்றால் கண்டு பிடித்து விடுகிறது. யாராவது வழியை தவறவிட்டால் அந்த 'ரோபோ' முன் நின்று பேசினால் போதும் சரியான இடத்தை கூறி அனுப்பி வைக்கிறது.

பொதுமக்கள் கூட்டமாக கூடுவதை கண்காணித்து கட்டுப்படுத்துகிறது. குறுக்கே யாராவது வந்தால் அல்லது தடைகள் இருந்தால் அவற்றை உணர்ந்து நகர்ந்து செல்லும் வகையில் உணரும் கருவிகள் இந்த 'ரோபோ'வில் பொருத்தப்பட்டுள்ளன.

இதில் முக்கியமாக சந்தேகத்துக்கிடமான வகையில் கீழே பைகள், புகை, நெருப்பு, பள்ளம் இருந்தால் உடனடியாக தகவல் தெரிவிக்கிறது. யாஸ் மால் வணிக வளாகத்தில் தற்போது இந்த 'ரோபோ' காவலாளியை காண பலர் சென்று வருகின்றனர். (2)

# அரசியலமைப்பு உருவாக்கக் குழுவில் இரு தமிழ் பேசும் நிபுணர்கள்

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நிபுணர்குழு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் இரு தமிழ் பேசும் நிபுணர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.**

குறித்த குழுவிற்கான நிபுணர்களை நியமிப்பது தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதன்போது, குறித்த குழுவில் தமிழ் - முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் வகையில் நிபுணர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், அமைக்கப்பட்டுள்ள நிபு ணர் குழுவில் கலாநிதி ஏ.சர்வேஸ்வரன் மற்றும் பேராசிரியை நஜீமா கமுறுடீன் ஆகியோர் அடங்கிய 9 பேர் அடங்கிய நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் நாட்டில் வாழ்கின்ற பல்லின சமூகங்களினதும் அபிலாசைகளையும் கலாசார பண்பாடுகளையும் கருத்திலெடுத்து நாட்டின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு உகந்த அரசியலமைப்பை உருவாக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள 9 மாவட்டங்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)



பல பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலை தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி இதனைத் தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ள ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க மூன்று மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது மாவட்ட செயலாளர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதென உள்நாட்டு அலுவல்கள், பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் கிறிஸ்டி லால் பிரனாந்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனர்த்தம் தொடர்பாக பொது மக்கள் தகவல்களை அறிவிப்பதற்கு 117 என்ற விசேட தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தம் இடம்பெறுமாயின் அது குறித்து விரைவாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச செயலக மட்டத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதீப் கொடிப்பிலி சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# இந்திய உயர்ஸ்தானிகர் மின்சக்தி அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

இரு தரப்பு மின்கலத் திட்டங்களில் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக பதவியேற்ற அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், மின்சாரத்துறை உட்பட இலங்கையுடன் வலுவான மற்றும் பன்முக கூட்டாண்மைக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

டில்லியில் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற சர்வதேச சூரிய கூட்டணி ஸ்தாபக மாநாட்டின் போது அறிவிக்கப்பட்ட மூன்று சூரிய மின்கலத் திட்டங்களுக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன் வரிக்கு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஒரு வாய்ப்பை தெரிவிக்கும் கடிதத்தின் நகலையும் உயர்ஸ்தானிகர் ஒப்படைத்தார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிறைவு

ஒரு மகாராஜா இருந்தார். மிகவும் நல்லவர். தர்மசிந்தனை உள்ளவர். எல்லோருக்கும் எல்லா உதவியும் செய்வார். யாருக்கும் இல்லை என்று சொல்லமாட்டார்.

ஒரு சமயம் அவர் ஒரு பெரிய காட்சிச்சாலையைத் திறந்து வைத்தார். அதிலே ஏகப்பட்ட பொருள்கள். எல்லாமும் இலவசமாக கொடுப்பதற்காக. யார் வேண்டும் என்றாலும் வரலாம். எந்தப் பொருளை வேண்டும் என்றாலும் எடுத்துக் கொண்டு போகலாம். காசு கிடையாது. ஆண், பெண் எல்லோரும் வந்து அவர்கள் பிரியப்படி தங்களுக்குப் பிடித்தமானதை எடுத்துக் கொண்டு போகலாம் அது மாதிரி ஏற்பாடு.

இந்தக் காட்சிச்சாலைக்கு நிறைய பேர் வந்தார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு போனார்கள். சிலபேர் அவர்களுக்குத் தேவையான வேட்டி சட்டைகளை எடுத்துக் கொண்டு போனார்கள்.சிலபேர் அங்கேயிருந்த நல்ல புத்தகங்களை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலபேர் இரும்புப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள். சிலபேர் நல்ல பழவகைகளை எடுத்துக் கொண்டார்கள். எல்லோருக்கும் முழுமனநிறைவு. நிறைவோடு திரும்பிப் போனார்கள்.

ஒரேயொரு வயதான அம்மா...அவர்கள் மட்டும் அங்கே வந்தார்கள். ஆனால் எதையுமே தொடவில்லை...மனநிறைவு இல்லை.எல்லோரும் ஆச்சரியமாக அந்தம்மாவைப் பார்த்தார்கள்.ஊர் மக்கள் எல்லோருக்கும் மனநிறைவு... இந்தம்மாவுக்கு மட்டும் மனநிறைவு இல்லையா? என்ன காரணமாக இருக்கும். ''உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ள வேண்டியது தானே...'' என்றார்கள்.

"இங்கே இருக்கின்ற எந்தப் பொருளும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை . நான் மகாராஜவைப் பார்க்க வேண்டும் '' என்றார்கள்.

அங்கே இருந்த திவான் ஓடிப் போய் மகாராஜாவிடம் சொன்னார்.

உடனே மகாராஜா ஒரு யானை மேலே ஏறிக் கொண்டு அந்த அம்மாவைப் பார்க்க வந்துவிட்டார்.

அந்த அம்மா மன்னரைப் பார்த்து '' மகாராஜா கீழே இறங்கி வாங்க.. ஒரு முக்கியமான விடயம் பற்றி உங்களிடம் பேச வேண்டும்'' என்றார்கள்.

அரசர் யானையிலேயிருந்து கீழே இறங்கினார்.

அந்த அம்மா ராஜாவுடன் வலது கையைப் பிடித்துக் கொண்டு, மகாராஜா..இப்பொழுது நீங்கள் எனக்குச் சொந்தமாகிவிட்டீர்கள். காட்சிச் சாலையிலே உள்ள சின்னச்சின்ன பொருட்களையும் விளையாட்டுப் பொம்மைகளையும் நான் விரும்பவில்லை. உங்களைப் பெறவே நான் விரும்புகின்றேன். நீங்கள் எனக்குச் சொந்தமாகிவிட்டதனாலே இந்த ராஜ்யத்தின் செல்வம் எல்லாம் இப்பொழுது எனக்குச் சொந்தமாகி விட்டது..என்றார்கள். மகாராஜா மலைத்துப் போய் நின்றார். அந்த அம்மாவைக் கடைசி வரைக்கும் தன் அரண்மனையிலே வைத்து தாய்மாதிரி கவனித்துக் கொண்டார்.

நமக்கு பலவிதமான ஆசைகள்.அதனாலே அந்தந்த ஆசைக்குரிய பொருள்களைத் தேடிச் செல்கிறோம். இப்படிச் செய்வதனாலே திருப்தியே உண்டாகிறதில்லை.ஆசைக்கு அடிமையாகிறவர்கள் யாசகர்களுக்கும் யாசகர்கள் ஆகிவிடுகிறார்கள்." உலக இச்சைகளையும் பொருட்களையும் துறந்து இப்பரந்த பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருளைப் பெற்றுவிட்டால் உங்களுடைய எல்லா ஆசைகளும் பூர்த்தியாகி விடும் '' என்கின்றார் சுவாமி சிவானந்தர். எப்படி ஞானமுள்ள அந்த வயசான அம்மா மகாராஜவைச் சொந்தமாகப் பாராட்டி அவருடைய செல்வத்துக்கெல்லாம் அதிபதியாக ஆனார்களோ, அப்படியே எல்லா சௌகரியங்களும் உங்களைத் தேடிக் கொண்டு வரும் என்கின்றார் அவர்.

இந்தக் காலத்திலேயெல்லாம் அது மாதிரி உள்ளவர்களைப் பார்த்துக் கொள்வது மிகவும் அபூர்வம்.

ஒரு நண்பரைப் பார்த்துக் கேட்டேன்.

" ஏன் சேர் ... அந்த மகாராஜா மாதிரியே இப்ப ஒருத்தர் தன்னுடைய பங்களாவுக்கு உங்களைக் கூப்பிட்டு '' எதை வேண்டும் என்றாலும் எடுத்துக் கொண்டு போ என்று சொன்னால் முதலிலே எதை எடுப்பீர்கள் என்று கேட்டேன்.

'' முதலிலே அவரைத் தான் எடுப்பேன்.அவரை எடுத்துக் கொண்டு போய் எங்கேயாவது காட்டிலே விட்டுவிட்டு வந்து அதற்கு பின்பு அந்த பங்களாவிலே நான் இருப்பேன்''என்றார்.

# இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்திற்கான வாய்ப்பு இல்லாது போய்விட்டது-த ஹிந்து

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையானது அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்வதற்கு மக்கள் அளித்த தீர்ப்பாகக் கருதலாம். ஆனால், தாங்கள் செய்ய விரும்பும் மாற்றம் சீர்திருத்தத்தைக் கொண்டுவருமா, முடக்கிப்போடுமா என்பதையும் அந்த மாற்றமானது ஜனநாயகத்தின் அமைப்புகளை வலுப்படுத்துமா, பலவீனப்படுத்துமா என்பதையும் வெற்றியாளர்தான் முடிவு செய்ய வேண்டும் என த ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் தொடர்ந்து,

இலங்கையில் புதிய அரசு தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றினார். எதிர்பார்த்தபடியே, அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் என்றார். ஆகவே, இலங்கை புதிய அரசமைப்புச் சட்டத்தை நோக்கி நடைபோடவிருக்கிறது. அவர் சார்ந்த பொதுஜன பெரமுன கட்சி அதன் கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து மூன்றில் இரண்டு பங்கு இடங்களை வென்றிருக்கிறது. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நடக்கும் தேர்தல்களில் இத்தகைய வெற்றி முன்னுதாரணமற்றது.

எப்படியும் 19 ஆவது சட்டத் திருத்தத்தை ஒழிப்பது இந்தக் கட்சியின் தேர்தல் பிரசாரத் தில் பிரதான மையப்புள்ளியாக இருந்தது. ஆயினும், 19 ஆவது சட்டத் திருத்தத்தால் கிடைத்த நன்மைகளை ஒட்டுமொத்தமாகத் தூக்கியெறிவது தேவையா என்ற கேள்வி முக்கியமானது. இந்தச் சட்டத் திருத்தம் 2015 தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது.

இந்தச் சட்டத் திருத்தம் ஜனாதிபதியின் வானளாவிய அதிகாரத்தைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், இரண்டு தடவைக்கும் மேல் யாரும் ஜனாதிபதியாக முடியாது என்ற வரன்முறையையும் கொண்டுவந்தது. ஜனாதிபதி தன் போக்குக்கு பாராளுமன்றத்தைக் கலைப்பதைக் கடினமாக்கியது. அதேபோல், அவசியமான கண்காணிப்பு நிறுவனங்களின் சுதந்திரத்தையும் பாதுகாத்தது.

19 ஆவது சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெறுவதன் மூலம் தேர்தல் ஆணையம் உள்ளிட்ட சுதந்திரமான நிறுவனங்களின் அதிகாரங்களைக் குறைத்தல் என்பது ஜனநாயகத்தின் விழுமியங்களைக் கேலிசெய்வதாகும்.

தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தன்மை காரணமாகத்தான் பெரிதும் அமைதியான வழியில் தேர்தல் நடந்து முடிந்தது. தங்களுக்குப் பெருவெற்றி அளித்த சுதந்திரமான தேர்தலுக்கு மதிப்பு கொடுத்து, 19 ஆவது சட்டத் திருத்தத்தை ஆளுங்கட்சி காத்திட வேண்டும். கூடவே, 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கொள்கையின் அடிப்படையில் திருத்தப்படவிருக்கும் அரசமைப்புச் சட்டம், இலங்கையின் பன்மைத்தன்மைக்கும் இணக்கமான சூழலுக்கும் உலைவைத்துவிடக்கூடாது என்பதையும் அது நினைவில் கொள்ள வேண்டும். சிறுபான்மை இனங்களைப் பற்றிய எந்தக் குறிப்பும் ஜனாதிபதியின் உரையில் இல்லை என்பது கவனிக்க வேண்டியது.

பெரும்பான்மை சிங்களவர்களின் ஒப்புதல் இல்லாமல் சிறுபான்மையினருக்குச் சலுகைகள் கொடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டையே இலங்கை அரசியலாளர்கள் வெகுகாலமாகக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும் பான்மை மக்களின் ஆதரவை ராஜபக்ஷக்கள் எந்த அளவுக்குச் சார்ந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அதிகாரப் பரவலாக்கத்தின் திசையில் இலங்கை அடியெடுத்து வைக்காது என்றே தோன்றுகிறது.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதற்கு இனி வாய்ப்புகள் இல்லை எனும் நிலையில், குறைந்த பட்சம் மாகாணங்களுடன் போதுமான அளவு அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்பதே எல்லோரது எதிர்பார்ப்பும் என த ஹிந்து ஆசிரியர் தலையங்கம் சுட்டி நிற்கிறது. (ஜ-4)

# போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாமலாக்குவதற்கு தேவையென்றால் விசேட படையணியையும் உருவாக்குவோம்

## நீதியமைச்சர் திட்டவட்டம்

(கொழும்பு)

**போதைப்பொருள் அச்சுறுத்தலை நாட்டில் இருந்து இல்லாமலாக்கியே தீருவோம் என்றும் விசேட படையணி தேவையாக இருந்தால் அதனையும் உருவாக்குவோம் என்றும் நீதியமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.**



களுத்துறை வியன்கல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2015 இல் அரசாங்கம் அதிகாரத்தில் இருந்து செல்லும் போது நாட்டில் (குடு) போதைப் பொருள் தொடர்பில் 6 ஆயிரத்து 600 வழக்குகள் இருந்தன. 2016 இல் 800 வழக்குகள் இருந்தன. 2017 ஆகும் போது 11 ஆயிரம் வரை அதிகரித்திருந்தன. 2018 இல் 12 ஆயிரமாகி இருக்கின்றது. கடந்த வருடம் 16 ஆயிரமாக அதிகரித்துள்ளது. இந்த வருடம் மாத்திரம் இதுவரை போதைப் பொருள் சம்பந்தமான வழக்குகள் 13 ஆயிரம் வரை பதிவாகி இருக்கின்றன.


எனவே நாம் நாட்டை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் மக் களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவது போல், நீண்ட காலத்துக்கு நாடு முன் னேறிச் செல்ல நடவடிக்கை எடுத்து வருகின்றது. அச்சம் சந்தேகம் இல்லாத பாதுகாப்பான சூழலுடன் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற தேவையே ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதற்காக எங்களுடன் கைகோர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் இந்த நாட்டில் இருந்து போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாமலாக்கியே தீருவோம். நாட்டு மக்கள் அனைவரையும் அதிலிருந்து பாதுகாப்போம். போதைப் பொருள் கடத்தல் தொடர்பான ஆரம்பம் முதல் இறுதிவரையான தகவல்களை தேடுவோம். அதற்கு விசேட படையணி ஒன்று தேவையாக இருந்தால் அதனையும் நாங்கள் மேற்கொள்வோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# உலகளவில் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களில் பிரகீத் எக்னெலிகொடவின் பெயர் முதலிடத்தில்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் இதுவரையில் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் பட்டியலில் இலங்கையில் காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் பெயர் முதலிடத்தில் உள்ளது.



சர்வதேச ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நினைவுகூரப்பட்ட நிலையில், அதனை முன்னிட்டு "10 மோஸ்ட் ஏர்ஜென்ட்" என்ற தலைப்பில் பத்திரிகைச் சுதந்திரம் முற்றிலும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு அடக்குமுறையை அனுபவித்துவரும் நிலையில் ஊடகவியலாளர்களை உள்ளடக்கி இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவினால் வெளியிடப்பட்டிருக்கும் அண்மைய தரவுகளின்படி உலகளாவிய ரீதியில் 64 ஊடகவியலாளர்கள் காணாமல்போயுள்ளனர்.

இந்த நிலையில் சுதந்திர பத்திரிகையாளர் கூட்டணியினால் வெளியிடப்பட்ட இந்த பட்டியலில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி காணாமல்போன இலங்கையைத் தளமாகக் கொண்டு பணியாற்றிய ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் பெயர் முதலிடத்தில் உள்ளது.

எக்னெலிகொட தொடர்பாக தெரிவித்துள்ள ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான இலங்கையின் இணைய ஊடக செய்திச்சேவையைச் சேர்ந்த ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட சுமார் பத்தரை வருடங்களுக்கு முன்னர் அவரது வீட்டிலிருந்து புறப்பட்ட போதே அவரது மனைவியும் இரண்டு இளம் பிள்ளைகளும் அவரைக் கடைசியாகப் பார்த்திருக்கின்றார்கள்.

2010 ஜனாதிபதித் தேர்தலின்போது அவர் பல அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருந்தார். எக்னெலிகொட கடத்தப்பட்ட மையுடன் 7 பேர் தொடர்புபட்டிருப்பதாகக் கடந்த வருடம் சட்டமா அதிபர் திணைக்களம் குற்றஞ்சாட்டியிருந்ததுடன், அதுகுறித்த விசாரணைகள் தற்போதும் நடைபெற்றுவருகின்றன.

எனினும் கடந்த 6 மாத காலத்தில் இந்த வழக்கின் சாட்சிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம் என்று தான் நம்புவதாகத் தெரிவித்திருக்கும் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, அவர் மீதும் அவரது குடும்பத்தினர் மீதுமான அச்சுறுத்தல்கள் மற்றும் கண்காணிப்பு என்பன அதிகரித்திருப்பதாகவும் விசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

59

கலாநிதி முருகர் குணசிங்கம்

ஆனால் ஆங்கில நடைமுறையில் இல்லாத மேற்குறிப்பிட்ட நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் தமது மொழியினை தமது வீட்டிலும் பொது இடங்களிலும் கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றில் முழுமையாகப் பயன்படுத்துவதையும் அவர்களின் பிள்ளைகள் தமிழ்மொழியைச் சரளமாகப் பேசுவதையும் சர்வ சாதாரணமாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

மேலும் அவர்கள் தமிழ் மொழியை மட்டும் அல்லாது தாம் வாழுகின்ற நாடுகளில் உள்ள தேசிய மொழிகளாகிய பிரெஞ்சு, டச்சு, ஜேர்மன் போன்ற மொழிகளிலும் தேர்ச்சி பெற்று மும்மொழி விற்பன்னர்களாக சிறந்து விளங்குகின்றனர்.

அதுமட்டுமல்ல ஆங்கிலமொழியையும் ஒரு கட்டாயப் பாடமாகப் பாடசாலைகளில் பயின்றும் வருகின்றனர். ஆனால் ஆங்கிலமொழி நடைமுறையில் உள்ள நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் பிள்ளைகளில் பெரும்பான்மையினர் ஆங்கில மொழியில் மட்டுமே தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஏன் அவர்களால் குறைந்த பட்சம் தமது தாய்மொழியாகிய தமிழ்மொழியைத்தானும் இரண்டாவது மொழியாகக் கற்க முடியவில்லை?

இந்நிலைமைக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பு ஏற்க வேண்டியவர்கள் அவர்களது பெற்றோர்களே.

சுருங்கக்கூறின் குறைந்தபட்சம் ஆங்கிலம் நடைமுறையில் இல்லாத நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களின் எதிர்காலச் சந்ததியினராவது தமது தாய்மொழியான தமிழையும் தமிழ் அடையாளத்தையும் பேணிப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை பலரிடத்தில் இருப்பதையும் காண முடிகிறது.

ஏற்கனவே பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டதுபோல ஓர் இனம் தனது மொழியை இழந்து விட்டால் அந்த இனம் அடையாளம் இல்லாத இனமாக தாம் வாழும் நாடுகளில் உள்ள ஏனைய இனங்களோடு சங்கமமாகிவிடும் என்பதை மேற்கண்ட நாடுகளில் உள்ள பெற்றோர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமது அன்றாட வாழ்க்கையில் தமது குடும்பத்தினரோடு தமது சமூகத்தோடு தமது மொழியைப் பேசி வாழ்வதே பெருமையாகக் கொள்ள வேண்டும்.

அந்நிய மொழி மோகத்தில் விட்டில் பூச்சிகள்போல் வீழ்ந்து தமது அடையாளத்தையும் இழந்து மாற்று இனத்தவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் வாழுகின்ற ஒரு பரிதாப நிலைக்கு எமது இளம் சந்ததியினர் விட்டுச் செல்வது ஒரு குற்றச்செயலாகவே அமையும். தம் இனத்தையும் தமது மொழி, மதம், கலை, பண்பாடு ஆகியவற்றைப் போற்றி வளர்த்து மதிக்காதவரை தாம் தமிழர் என்று சொல்லிக் கொள்வதில் எதுவித அர்த்தமும் இல்லை.

இந்தியாவிலும் இலங்கையிலும் உலகின் பல நாடுகளிலும் கோடிக்கணக்கான தமிழர்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் அவர்களுக்கென்று ஒரு நாடு இல்லை என்று சிந்திப்பார்களேயானால் தமது மொழியையாவது அழிய விடாது காப்பாற்ற வேண்டிய ஒரு வரலாற்றுக் கடமை, ஒட்டுமொத்த புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு முன்னால் பரந்து விரிந்து கிடக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்வார்கள்.

புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளில் காணப்படும் ஈழத்தமிழர்களின் இந்து - சைவக் கோயில்களும் கலை, பண்பாட்டு நிறுவனங்களும் தமிழ் மொழிப் பாடசாலைகளும் ஈழத்துத் தமிழ் இனத்தின் பாரிய பங்களிப்பு ஆகும்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ் மொழி தமிழர்கள் வாழும் தமிழ் ஈழம், தமிழ்நாடு ஆகிய இரு நாடுகளின் எல்லைகளையும் கடந்து இன்று நாடு கடந்த மொழியாகவும் உலகின் பல்வேறு நாடுகளில் பேசப்படும் மொழியாகவும் எழுச்சியும் வளர்ச்சியும் பெற்று உள்ளது.



இந்தப் பெருமையும் பங்களிப்பும் ஈழத்தமிழர்களுக்கே சொந்தமானது. அவர்கள் தமது எதிர்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்லும் அசைக்கமுடியாத பாரம்பரியச் சொத்து ஆகும்.

அதனைத் தொடர்ந்து பேணிப்பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பும் கடமையும் அவர்களது இளம் தலைமுறையினரின் கைகளில்தான் உள்ளது.

தாம் வாழும் நாடுகளில் அவர்கள் தமது தேசிய அடையாளத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கே உரியது.

தமது தாய்நாட்டுக்குப் பல்வேறு வழிவகைகளில் பாரிய பங்களிப்பைச் செய்வதற்கான கதவுகளும் அவர்களுக்கு அகலத் திறந்து விடப்பட்டு உள்ளன.

**கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார அடித்தளம்**

ஈழத்தமிழர்கள் கல்வியைக் கண்ணாகக் கருதி முன்னுரிமை கொடுப்பவர்கள்.

அவர்களின் சமூக, புவியியல், பொருளாதார, அரசியல் நிலைமைகளே அதற்கு முக்கிய காரணியாகும் என்பதனை ஏற்கனவே ஆய்வு செய்து இருக்கின்றோம்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் அங்குள்ள கல்வி வாய்ப்புகளை எந்தளவிற்குப் பயன்படுத்தி இருக்கின்றனர்.

அவர்களது இளைய தலைமுறையினர் கல்வி, தொழில்கள் மற்றும் பொருளாதாரத்தில் எத்தகைய வளர்ச்சி நிலையை அடைந்து உள்ளனர் என்பது குறித்தும் இந்த அத்தியாயத்தில் காண்போம்.

குறிப்பாக ஆசிய பசுபிக் நாடுகளில் இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளும் மேற்கு ஐரோப்பாவில் சுவிட்சர்லாந்து, வடஅமெரிக்காவில் கனடாவும் சற்று விரிவாக ஆய்வு செய்யப்படும்.

இந்த நாடுகளில் உள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதனூடாக ஏனைய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு நிலைமைகள் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடியும்.

முதலில் தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களின் கல்வி, வேலைவாய்ப்பு நிலைமைகள் பற்றிச் சுருக்கமாக நோக்குவது பொருத்தமானது ஆகும்.

தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களின் கல்விப் பாரம்பரியம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆறுமுக நாவலரால் தொடங்கி வைக்கப்பட்டது.

அவருடைய சகாக்கள் பலர் தமிழ் நாடு சென்று கல்வி கற்று அரச துறைகளில் பணியாற்றியதோடு மட்டும் நிற்காமல் தமிழ்ப் பணிகளையும் தொடர்ந்து செய்தனர்.

அவர்களுள் முதன்மையாக சி.வை. தாமோதரம்பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்று 1857 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற முதல் பட்டதாரிகளில் ஒருவர் ஆவார்.

அவர் பல அரிய ஓலைச் சுவடிகளைத் தேடிப்பெற்று அச்சில் ஏற்றி நூல் வடிவம் பெறச் செய்தவர்.

பிரித்தானிய அரசில் தொழில் புரிந்தவர். அதேபோன்று வி.கனகசபைப்பிள்ளை, ரி.செல்லப்பாபிள்ளை, ரி.ஏ. இராஜரத்தினம் பிள்ளை, சபாபதி நாவலர், என்.கதிரவேற்பிள்ளை, விசுவநாதப் பிள்ளை போன்றோரும் தமிழ்நாட்டில் கல்வி கற்று தமிழ்ப் பணியாற்றியதுடன் அரச அதிகாரிகளாகவும் தொழில் புரிந்தனர்.

இவர்கள் அனைவரும் ஈழத்திற்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு அங்கும் தமது தமிழ்ப்பணிகளைத் தொடர்ந்து செய்து தமிழ்நாட்டுக்கும் தமிழ் ஈழத்திற்கும் இடையேயான தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் பாலமாகத் திகழ்ந்தனர்.

"யாழ்.நூலை" உருவாக்கிய சுவாமி விபுலானந்தர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்ததோடு மட்டுமல்லாமல் பல தமிழ்ப் பணிகளையும் புரிந்தவர்.

இத்தகைய கல்விமான்கள் மேற்கொண்ட முயற்சிகளைத் தொடர்ந்து தமிழ் ஈழத்தில் இருந்து குறிப்பாக வசதி படைத்த ஈழத்தமிழர்களின் பிள்ளைகள் நூற்றுக்கணக்கானோர் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள பல பல்கலைக்கழகங்களில் பல்வேறு துறைகளில் தமது பட்டப் படிப்புகளை மேற்கொண்டுள்ளனர்.

அவர்களுள் பலர் அரசில் தொழில் பார்த்து பின்னர் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். அதிகமானவர்கள் மீண்டும் தமிழ் ஈழத்திற்குச் சென்று பலர் ஆசிரியர்களாகப் பணி ஆற்றினர்.

1983 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தை அடுத்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்த ஈழத்தமிழர்களின் பிள்ளைகளில் பலர் தமிழ்நாடு அரசு வழங்கிய உதவியால் அங்குள்ள ஆரம்பப் பாடசாலைகள், உயர்தரப் பாடசாலைகள் பல்கலைக்கழகங்களில் தமது கல்வியைத் தொடர்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் பலர் இலங்கையில் இருந்து மாணவர்களுக்கான நுழைவு உரிமை (விசா) பெற்று இந்தியாவிற்கு வந்து பல்வேறு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வருகின்றனர்.

சென்னை, திருச்சி, பெங்களூர், மதுரை, நியூடில்லி போன்ற இடங்களில் கல்வி கற்கின்றனர் என்பதனையும் அறிய முடிகிறது.

இவர்களுள் பலர் கல்வி கற்று முடிந்தவுடன் ஏதோவொரு வழியில் மேலைத்தேச நாடுகளுக்குச் சென்று அங்கு வாழ்வதையும் மிகச் சிலரே இலங்கைக்குத் திரும்பிச் செல்வதையும் அறிய முடிகிறது.

(தொடரும்)

# அரசியல் பழிவாங்கல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுங்கள்- பிரதமர் மகிந்த

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளானோர் தொடர்பாக ஆராயும் குழுவின் முதன்மை அறிக்கை நேற்று முன்தினம் புதன்கிழமை அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.



2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அரச சேவையில் நிர்வாக ரீதியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான 6 ஆயிரத்து 952 பேரில் இருவர் இதுவரை இக்குழுவில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

அதில், ஆயிரத்து 152 பேரின் மேன்முறையீடுகள் குறித்த விசாரணைகள், அவதானிப்புகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் அரசியல் பழிவாங்கல்கள் இடம் பெற்றுள்ள விதம், குழுவில் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் குறித்து ஆராயும் போது தெளிவாகியதாக குழு உறுப்பினர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு விளக்கினர்.

அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளான அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவது இக்குழுவின் கடமையாகும் என்றும், நிறுவன தலைவர்களுக்கு அறிவிக்கப்படும் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், அமைச்சரவைக்கு தெரியப்படுத்தி, அந்தந்தத் துறைகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களினூடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

குறித்த சந்திப்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, அரசியல் பழிவாங்கல்கள் குறித்து ஆராயும் குழுவின் உறுப்பினர்களான ஏ. ஆரியரத்ன, மகிந்த செனவிரத்ன, குழுவின் செயலாளர் சட்டத்தரணி சதுரிக்கா விஜேசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-4)

# பொது மக்கள் சந்திப்புகளில் அமைச்சர்கள் இருக்க வேண்டும்

(கொழும்பு)

பொதுமக்கள் சந்திப்பு இடம் பெறும் புதன்கிழமை நாட்க ளில் தமது அமைச்சுக்களில் கட்டாயம் அமைச்சர்கள் இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அத்துடன் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் அமைச்சுக்களில் இருக்க வேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)

# பாடப் புத்தகங்களை விற்றவர் கைது

(கொழும்பு)

மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ஆயிரத்து 75 பாடப்புத்தகங்கள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஹவத்தை நகரில் உள்ள பழைய புத்தகங்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிலேயே இந்த புத்தகங்கள் மீட்கப்பட்டுள்ளன.


தரம் 6 முதல் 11 வரை யிலான மாணவர்களுக்கு 2020ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட தமிழ் மொழி மூலப் புத்தகங்கள் என்பதுடன் குறித்த புத்தகங்கள் 2019ஆம் ஆண்டு அச்சிடப்பட்டவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த விற்பனை நிலைய உரிமையாளர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு கஹவத்த பொலிஸா ரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஜ-4)

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2105

**யுகேஷ்**

வெற்றி தோல்வி என்பன முடிவல்ல
வெற்றி என்பது ஆரம்பம்
தோல்வி என்பது அனுபவம்



அதிக அனுபவம் உள்ளவர்களே
சிறப்பான வெற்றியைத் தழுவுகின்றனர்..

**தர்மினி**

வாழ்க்கையானது முறுக்கு மாதிரி கடினமாக இருக்கும் போதெல்லாம் அன்பு எனும் காபியில் ஊற வைத்தால் இலகுவாக இருக்கும்...



**தயாழினி**



ஒரு எண்ணை டின்னில் பறவைகளுக்கு தண்ணீரும் 4 டைனிங் டேபிளில் உணவும்... இந்த மனசு தாங்க கடவுள்...

**தக்ஷா**

ஒருவன் ஜெயிலில் இருந்து 12 வருடங்களுக்கு பிறகு தப்பித்து வீட்டுக்கு வருகின்றான்.
மனைவி அவனை மேலும்
கீழும் பார்த்து முறைத்துவிட்டு,
தப்பித்து 8 மணி நேரம் ஆச்சுன்னு டி.வில சொன்னாங்க இவ்வளவு நேரம்
எங்க போயிருந்தீங்க?



**சஞ்சை**



புரிதல் இல்லாத வாழ்க்கை
துடுப்பில்லாத படகு போன்றது சிறிது
தூரம் மிதக்கலாம்,தொலைதூரம்
பயணிக்க முடியாது...

**துஷாந்**

கனவுகள் எல்லாம் வரம் தான்...
தீர்க்க முடியாத துக்கத்தையும்,
அடைய முடியாத ஆசைகளையும்
கனவு தான் தீர்த்து வைக்கின்றது...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க D பிரிவு வழங்கும்




மரியானா அகழியின் அமைவிடம்

## நாம் வாழும் பூமி

எமது பூமியின் கடற் படுகைகளில் பலஅகழிகள் காணப்படுகின்றன. அவற்றுள் மரியானாஅகழி (**Maria na Trench**) என்பது, உலகின் கடற் பகுதிகளில் உள்ள மிகவும் ஆழமான இடம் ஆகும். புவிமேலோட்டில் உள்ள மிகத் தாழ்வான பகுதியும் இதுவே.

இவ் மரியானா அகழியின் ஆழம் (35,840 அடிகள்) ஆகும். இப்பகுதி வடக்குப் பசுபிக் பெருங்கடலில் மரி யானா தீவுகளுக்குத் தெற்கிலும் , கிழக் கிலுமாக குவாமுக்கு(**Guam**)அருகில் அமைந்துள்ளது.

இவ் மரியானாஅகழியைச் சூழ யப்பான், தாய்வான், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா மற்றும் பப்புவா நியூ கினிஆகிய நாடுகள் காணப்படுகின்றன.

மரியானா வளைவின் ஒரு பகுதி யான இந்த அகழி, பசுபிக் புவிப் பொறைத் தட்டும், சிறிய மரியானா புவிப்பொறைத் தட்டும் சந்திக்கும் இடத் தில் அமைந்துள்ளது. இந்த அகழியின் அடிப் பகுதியில், அதற்கு மேலுள்ள நீரினால் ஏற்படுத்தப்படும் அழுக்கம் 108.6MPa(1.086X$10^8$Pa) ஆகும். இது கடல் மட்டத்தில் உள்ள வளிமண் டல அழுக்கத்திலும் பார்க்க 1000 மடங் கிற்கும் மேலானது. இவ்வாழத்தில் வாழக்கூடிய உயிரினங்கள் மிகக் குறை வாகவே காணப்படுகின்றது. சிலவகை ஆழ்கடல்மீன்கள்இப்பகுதியில்வசிப்பது ஆய் வுகள் மூலமாகத் தெரியவந்துள்ளது.

1981 ஆம் ஆண்டு உசோங் மற் றும் பிரேயர் என்போரால் எழுதப்பட்ட நூலில் மரியானா அகழியின் குறுக்கு வெட்டு தோற்றம் வரையப்பட்டுள்ளது. (அருகிலுள்ள படம்) மரியானா அகழி யின் ஆழம் முதன் முதலாக 1872 மார் கழி முதல் 1876 வைகாசி வரையான சலஞ்சர் ஆய்வுப் பயணத்தின் போது அளக்கப்பட்டது.

இதன்படி இவ்வகழியின் ஆழம் 31,614 அடிகளாகப் (9,636m) பதிவு செய்யப்பட்டது. பின்னர் சலஞ்சர் - 2 ஆய்வுப் பயணத்தின் போது, திருத்த மான எதிரொலிமானியைப் பயன்படுத்தி மீண்டும் அளக்கப்பட்டது. அப்போது இதன் அதிகூடிய ஆழம் 35,760 அடிகள் (10,900m) எனப் பதிவு செய்யப்பட்டது. **11°19'N 142°15'E** ஆள்கூற்றால் குறிக் கப்படும் இவ்விடம் சலஞ்சர் ஆழம் (**Challenger Deep**) எனப்படுகின்றது.


1957 ஆம் ஆண்டில் வித்தியாசு (**Vityaz**) எனப்படும் சோவியத் கடற்கலம் இதன் ஆழத்தை 11,034m (36,200 அடிகள்) என அளவிட்டது. அதன் பின்னர் 1962 ஆம் ஆண்டில் கடற்பரப்புக் கப்ப லான **M.V.Spencer F.Baird**, திருத்த மான அளவு மானிகளைப் பயன்படுத்தி இதன் ஆழத்தை 10,915 மீற்றர்கள் (35,840 அடிகள்) எனக் கணக்கிட்டது. 1984 ஆம் ஆண்டில், இதற்கென உயர் சிறப்பாக்கம் பெற்றதக்குயோ (**Takuyo**) என்னும் அளவைக் கலம் ஒன்றை அனுப்பிய யப்பானியர், ஒருங்கிய பல் கதிர் எதிரொலி மானியைப் (**a narrow, multi-beam echo sounder**) பயன் படுத்திச் சேகரித்த தரவுகளைப் பயன் படுத்தி இதன் ஆழத்தை 10,924 எனக் கணக்கிட்டதுடன் இதன் துல்லிய எல்லை கள் **10,920± 10m** எனவும் அறிவித்தனர்.

இதுவரை எடுக்கப்பட்டவற்றுள் மிகத் திருத்தமானது எனக் கொள்ளத்தக்க அளவீடு 1995 ஆம் ஆண்டில் எடுக்கப்பட் டது. யப்பானின் இந்த ஆய்வுத் திட் டத்தில் கைக்கோ (**KAIKO**) என்னும் ஆளில்லாக் கலம் 1995, பங்குனி 24 ஆம் திகதி அகழியின் அடித்தளத்தில் இறங்கியது. இது அகழியின் ஆழ த்தை 10,911m (35,798 அடிகள்) என அளவிட்டது.


கைக்கோ (**Kaiko**) என்பது ஆழ்கட லில் தொலை தூரம் இயங்கக்கூடிய நீர்க்கீழ்க் கலம் ஆகும். இது ஜாம்ஸ் ரெக் (**JAMSTEC**) என்னும் யப்பானிய நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்டது. இது உலகின் மிக ஆழமான கடற்பகு தியான மரியானா அகழியிலுள்ள சலஞ்சர் ஆழம் என்பதன் தளத்தில் இறங்கி அங்கிருந்து பக்ரீரியா மாதிரி களையும் எடுத்து வந்தது. 1996 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2 ஆம் திகதி **10,897m** ஆழத்தை எட்டிய இக் கலமே மிகக் கூடிய ஆழத்துக்கு நீரில் மூழ்கிய ஆளில்லாக் கலம் என்ற பெருமையைப் பெற்றது.

2003 வைகாசி மாதத்தில் சான் - ஓம் சூறாவளியின் போது இதனை மேற்பரப்புடன் இணைத்த கம்பிவடம் அறுந்ததனால் கடலுள் அமிழ்ந்து காணாமற் போய்விட்டது.

சுவிட்சர்லாந்தில் வடிவமைக்கப்ப ட்டு இத்தாலியில் நிர்மாணிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான டிரையஸ்டி (**bathyscap he Trieste**) என்ற கப்பலில் 1960, தை மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் 1:06 மணிக்கு அமெரிக்கக் கடற்படை வீரரொன் வால்ஸ் (**Don Walsh**) என்பவரும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெருங்கடல் குறிப்பு வல்லுநர் சாக் பிக்கார்ட் (**Jacques Piccard**) என்ப வரும் மரியானாஅகழியின் அடிப்பகுதி க்குச் சென்றனர்.




மரியானா அகழியின் குறுக்கு வெட்டுத் தோற்றம்



The bathyscaphe Trieste (designed by Auguste Piccard), the first manned vehicle to reach the bottom of the Mariana Trench




Kaiko–தானியங்கிக் கருவியால் இயங்கும் நீரக் கீழ்க் கலம்
(remotely operated underwater vehicle)



Lt. Don Walsh, USN (bottom) and Jacques Piccard (center) in the bathyscaphe Trieste

இவர்களுக்குப் பின்னர் 2012 ஆம் ஆண்டில் தனியொரு ஆளாக கனே டிய திரைப்பட இயக்குநர் ஜேம்ஸ் கேமரன் அகழியின் அடிப்பகுதிக்குச் சென்று திரும்பினார்.

இவர் 2012 பங்குனி 26 ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட டீப்சீசலஞ்சர் என்ற நீர் மூழ்கியில் உள்ளூர் நேரம் 07:52 மணிக்கு அகழியின் ஆழத்தை அடைந்தார்.

**அ.குகன்**
**விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய**
**கல்வியியற் கல்லூரி.**

# நிறம் மாறிய கடல் ஆய்வில் புதிய தகவல்

(கொழும்பு)

**நெவிகியுலா என்ற பெயருடைய டயடம் ஆல்கா வகை ஒன்று கடலில் பரவியுள்ளதாக நாரா நிறுவனம் மேற்கொண்டுள்ள ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.**

கடந்த 31 ஆம் திகதி அங்குலான பகுதியை அண்டிய கடற்பகுதி பச்சை நிறமாக மாறியுள்ளதாகவும் இந்த மாற்றம் காரணமாக அந்தப் பகுதியில் பிடித்த மீன்கள் பச்சை மற்றும் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த அறிவிப்பை தொடர்ந்தே நாரா நிறுவனம் இது தொடர்பில் ஆய்வொன்றை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் நாரா நிறுவன அதிகாரியொருவர், குறித்த ஆய்வில் தெரியவந்துள்ள ஆல்கா வகை விசத்தை ஏற்படுத்தும் ஆல்கா என உறுதி செய்யப்படவில்லை எனத்தெரிவித்துள்ளார்.

காலி, களுத்துறை, பயாகல, பேருவளை, சிலாபம் மற்றும் மோதர கடற் பிரதேசங்களில் நேற்றும் இந்த நிலைமை காணப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பில் மேலதிக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# ஆன்மீகம்

## சாபங்களையே வரங்களாக்குவோம்!



மூவாயிரம் பேர் வேலை பார்த்து வந்த அந்த கார் தொழிற்சாலையின் கதவுகள் திடீரென்று ஒருநாள் மூடப்பட்டன. பல்வேறு பிரச்சினைகளாலும் தொடர் நட்டத்தினாலும் இனிமேல் ஆலையை இயக்க முடியாது என்று நிர்வாகத்தினரின் அறிவிப்பு வெளிக்கதவில் ஒட்டப்பட்டது. அதைப்பார்த்த தொழிலாளிகளும் அவர்களின் மனைவிமார்களும் குழந்தைகளும் பதைபதைத்தனர். தொழிற்சங்கத்தின் தொடர் போராட்டங்கள், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதுவுமே ஆலையின் கதவுகளைத் திறக்கவில்லை.

நிர்க்கதியாக நின்ற தொழிலாளர்களில் தற்கொலை செய்து கொண்டவர்கள் சிலர், 'அவ்வளவுதான், நம் வாழ்க்கை. அஸ்தமித்து விட்டது என்று அரற்றிக் கொண்டே இருந்தவர்கள் சிலர். சோகம் கவ்வ சொந்த ஊர் நோக்கிச் சென்றவர்கள் சிலர். ஆனால், சிலரோ இதைச் சாபமாக எடுத்துக் கொண்டு சரிந்து போய்விடவில்லை. முயன்று பார்த்தோம்! கதவுகள் திறக்கவில்லை! இனி வேறு வழிகளில் சென்று போராடி வாழ்வில் வெற்றி பெறலாமே என எண்ணினர். சொந்தக் கடை வைத்தும், தூர தேசத்திற்குச் சென்றும், அவரவருக்குள் இருந்த ஆர்வக்கனலை ஊதி ஊதி பல்வேறு துறைகளில் பரிணமித்து வாழ்வில் வெற்றி பெற்றனர்.

'கடவுள் ஒரு கதவை மூடினால் இன்னொரு கதவைத் திறந்து வைக்கிறார்' என்றார் ஒருவர். இன்னொருவர் சொன்னார், 'அப்படியல்ல! கடவுள் ஒரு கதவைத் திறந்து விட்டுத்தான் இன்னொரு கதவை மூடுகிறார். நாம் மூடிவிட்ட கதவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதால்தான் திறந்து வைத்திருக்கும் கதவு நமக்குத் தெரிவதில்லை.

ஆம்! ஒன்று போனால் வேறொன்று. வாய்ப்புகள் பலவழிகளில் இருந்து கொண்டேதான் உள்ளன. உள்ளது தொலைந்து போனால் இன்னொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான வரம் அது என்று கொள்பவனே வாழ்வில் முன்னேறுகிறான். ஒரு குறுநிலமன்னர், தன் அரசவைப் புலவராக இருந்தவரை பின்னர் நல்லமுறையில் ஆதரித்து அவரின் தமிழ்க் கவிதைகளில் மனம் பறிகொடுத்தார்.

கவிஞருக்கும் அவருக்கும் இடையே ஒரு விடயத்தில் மனக்கசப்பு ஏற்படவே மன்னர் சினந்து, 'உம்மை அரசவைப் புலவர் பதவியினின்று விலக்குகின்றேன்' என்று கூறினார். பதவி போய்விட்டதே என்று கவிஞர் கண் கலங்கவில்லை. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பல்லவா? 'இருபத்து நான்கு காத எல்லைக்குட்பட்டதுதானே நீர் ஆளும் பகுதி? இதற்கு மேல் உள்ள பகுதிகளைக் கடல் பொங்கிக் கொள்ளை கொண்டு விட்டதா என்ன? என் அருந்தமிழை ஆதரிக்க எத்தனையோ வேந்தர்கள் இருக்கின்றார்கள்.

**"மன்னரும் நீயோ! வளநாடும் உன்னதோ?**
**உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?**
**'காதம் இருபத்து நான்கு ஒழியக் காசினியை**
**ஓதக் கடல் கொண்டு ஒளித்ததோ?"**

இப்படி நாவீறுடன் முழங்கிய அந்த நற்றமிழ்க் கவிஞர்தான் கம்பர் என இலக்கியம் இயம்புகின்றது. குறுநில மன்னரின் அரசவைப் புலவர் பதவி போனதே என்று மனம் குமையாமல் தமிழ் நிலம் முழுதும் புகழும் தன்னிகரற்ற காவியம் அல்லவா பிற்பாடு கண்டார் அவர்! அந்த இராமாயணத்தில் கைகேயி பிரதான கதாபாத்திரம்.

தசரதனின் அன்பிற்குகந்த அருமை மனைவி. பரதனின் அன்னை. சம்பரன் என்ற அரசனுடன் தசரதர் போர் புரிந்த சமயம் அவரின் தேர் அச்சாணி கழன்றது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் அறிவித்தல்

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கு கற்றல் விடுமுறை வழங்கப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெறும். க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக் காலப்பகுதியில் அனைத்து பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்கப்படும். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் அனைத்தும் முடிவுற்றதன் பின்னர் பெப்ரவரி முதலாம் திகதி முதல் மீண்டும் அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

2020 ஆம் ஆண்டுக்கான பொதுப் பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 11 ஆம் திகதியும் க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் - ஒக்டோபர் 12 ஆம் திகதி முதல் நவம்பர் 6 வரையும் நடைபெறவுள்ளது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஜ-4)

## திடீரென தீப்பற்றிய கப்பல்



(அம்பாறை)

அம்பாறை சங்கமன்கந்தவிற்கு கிழக்காகவுள்ள கடற்பிராந்தியத்தில் கப்பல் தீப்பற்றி எரிவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மீட்புப்பணிகள் இடம்பெற்று வருகின்றன. எம்.ரி. நியு டைமன் என்ற எண்ணெய்க்கப்பலே தீப்பற்றியுள்ளது.

மீட்புப் பணிகளுக்காக இரண்டு கடற்படைக் கப்பல்கள் குறித்த பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக சிறிய ரக விமானம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 240 |
| தக்காளி | 120 | 130 | 130 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 80 |
| கோவா | 100 | 150 | 160 | 160 |
| கரட் | 80 | 160 | 200 | 170 |
| பூசணி | 100 | 110 | 130 | 100 |
| புடோல் | 50 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 130 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 110 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 200 | 300 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 160 |
| பயற்றங்காய் | 200 | 160 | 200 | 160 |
| லீக்ஸ் | 80 | 200 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 120 |
| கறிமிளகாய் | 350 | 280 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 280 | 300 |
| போஞ்சி | 300 | 300 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 120 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 100 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | --- | --- | 300 | --- |
| வெங்காயப்பூ | 200 | 170 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 70 |




# யானையின் திறமை

ஒரு காட்டில் யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்கு நண்பர்கள் யாரும் இல்லாததால் அந்த காட்டில் நண்பர்களை தேடிச் சென்றது.

யானை முதலில் மரத்தில் ஒரு குரங்கை பார்த்தது.அந்த குரங்கிடம் சென்று "நீ என்னை நண்பனாக ஏற்றுக் கொள்வாயா" என்று கேட்டது.


அதற்கு அந்த குரங்கு "நீ பெரிய உடம்பினைக் கொண்டுள்ளாய்.அதனால் என்னை போல் உன்னால் மரத்திற்கு மரம் தாவ முடியாது.

ஆகவே உன்னை நண்பனாக ஏற்றுக் கொள்ள முடியாது" என்று குரங்கு சொன்னது.

அடுத்ததாக யானை முயல் ஒன்றை பார்த்தது.அந்த முயலிடம் சென்று "என்னை நண்பனாக ஏற்றுக்கொள்வாயா" என்று கேட்டது.

அதற்கு அந்த முயல் "நீ பெரிய உடம்பினை கொண்டுள்ளாய்.அதனால் உன்னால் என்னை போல் வேகமாக ஓடமுடியாது" என்று சொன்னது.

அடுத்ததாகயானை தவளை ஒன்றை பார்த்தது.அந்த தவளையிடமும் சென்று "என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்வாயா என்று கேட்டது.



அதற்கு தவளை "என்னை போல் உன்னால் தாவ முடியாது".ஆதலால் உன்னை என் நண்பனாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னது.

கடைசியாக யானை நரி ஒன்றை பார்த்தது.அதனிடமும் சென்று "என்னை உன் நண்பனாக ஏற்றுக்கொள்வாயா" என்று கேட்டது.

நரியும் "நீ உடம்பளவில் பெரியவனாக உள்ளாய்" ஆதலால் உன்னை நண்பனாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னது. யானை கவலையில் தனது இடத்திற்குச் சென்றது.

அடுத்த நாள் காலையில் விலங்குகளின் சத்தம் கேட்டு அங்கு ஓடிக்கொண்டிருந்த கரடியிடம் ஏன் ஓடுகிறீர்கள்? என்று யானை கேட்டது.

அதற்கு கரடி இங்கு உள்ள விலங்குகளை ஒன்று ஒன்றாக புலி கொன்று சாப்பிட்டு வருகிறது. அதனால்தான் நாங்கள் ஓடுகிறோம் என்று சொல்லிக்கொண்டே ஓடியது.

யானை இதற்கு ஒரு வழி கொண்டுவரணும் என்று நினைத்து புலியிடம் சென்றது. புலியைப் பார்த்து ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டது.

அதற்கு அந்த புலி இது உனக்கு தேவையில்லாத விஷயம் என்று சொன்னது. யானை அதற்கு பாடம் கற்பிக்கும் வகையில் அதனை தனது காலால் உதைத்து தள்ளியது.

காயத்துடன் அந்தப் புலி அந்தக் காட்டை விட்டு தலை தெறிக்க ஓடியது. இதனைக் கண்ட அங்கு உள்ள விலங்குகள் நீ உடம்பில் பெரியவன் அல்ல. நீ இனி எங்கள் நண்பன் என்று சொல்லி யானையை நண்பனாக ஏற்றுக் கொண்டன.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

57

பல்லவர் காலத்தில் கட்டுமானம் என்கிற அளவில் இருந்த கோயில் கட்டும் பணி சோழர் காலத்தில் இயக்கமாக மாறியது. ஆகச்சிறந்த உதாரணம் பெரிய கோயில்.

பக்தி என்பது அக்கால மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தது. கோயில்கள் புராணம் சார்ந்து இருந்தன. பக்தியைத் தங்கள் வாழ்வின் சித்தாந்தமாக மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

தெய்வ உருவங்கள் வழியாக ஓர் அரசன் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தினான்.

ராஜராஜசோழன் தஞ்சையில் ராஜராஜீஸ்வரம் என்ற பெயரில் பெருங்கோயில் ஒன்றை எழுப்புவதற்கு அடிப்படையாக இருந்தது ஆன்மீகத் தேடலா? அல்லது அரசியல் கண்ணோட்டமா? என்கிற கேள்வி எழுந்தால் அரசியல் கண்ணோட்டம்தான் என்கிற விடைதான் கிடைக்கிறது.

பெரிய கோயிலை ஓர் இறைவழிபாட்டுக் கூடமாக மட்டும் ராஜராஜன் பார்க்கவில்லை. வெறும்



குடைவரைக் கோயில்

இறை உணர்வுக்காக அவர் பெரியகோயிலை எழுப்பவில்லை. அவர் கணக்கு வேறாக இருந்தது.

பெரியகோயில் நம்மைப் பொறுத்தவரை ஒரு கண்கவர் சிவாலயம். ஆனால் இக்கோயிலை ஒரு வழிபாட்டுத் தலமாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தச் சோழமண்டலத்தின் பங்களிப்புடைய நிர்வாகக் கேந்திரமாக செயற்படுத்தச் செய்துள்ளார் ராஜராஜன்.

பெரிய கோயில் பொது இடமாக இருந்ததில் ராஜராஜன் அரசுக்கு ஒரு இலாபமும் இருந்தது. அரசின் செயற்பாடுகள், அறிவிப்புக்கள், கொடை, ஆட்சிமுறை, வரி விடயங்கள் போன்றவை கோயில் களில் உள்ள கல்லில் வெட்டி வைக்கப்பட்டன.

தமிழ்ப்பண்பாடு, கலைத்திறமை போன்றவற்றை நாடு அறியவும் வேற்றுமொழிக் கலாசாரம் உட்புகுவதைத் தடுக்கவும் சோழ மக்களைக் காக்கவும் ராஜராஜன் இக்கோயிலைப் பயன்படுத்திக் கொண்டார்.

சோழர்காலத்து இலக்கியம், அரசியல், வாழ்வியல் முறைகள், பொருளாதாரம், கலைகளின் வளர்ச்சி போன்றவற்றை பெரியகோயில் வழியாகவே அறியமுடிகிறது.

மகேந்திரவர்ம பல்லவன் இயற்கையால் அழிந்துவிடக்கூடிய செங்கல், மரம், சுதை மற்றும் உலோகங்களைக் கொண்டு கோயில் கட்டாமல் கருங்கற்களைக் குடைந்து நான்முகன், சிவன், திருமால் ஆகிய தெய்வங்களுக்குக் கோயில் கட்டினார்.

இதற்கு முன் கோயில் கட்ட உபயோகித்த மரமில்லாமல், சுதையில்லாமல், செங்கல் இல்லாமல், உலோகமில்லாமல் மும்மூர்த்திகளுக்கு ஒரு கோயில் கட்டியிருக்கிறேன் என்று விழுப்புரம் மண்டகப்பட்டு இலக்சிதன் குடைவரைக் கோயிலில் கல்வெட்டு செதுக்கினார்.

காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட கோயில்கள் மத்தியில் மாமல்லபுரக் கோயில்கள் இன்றும் வலுவோடு நின்று கொண்டிருக்கின்றன (தொடரும்)

ஓர் உயரிய புத்தகமானது எத்தனையோ பேர்களின் வாழ்க்கையில் புரட்சியை உண்டு பண்ணுகிறது.
– சோபத்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேரவை விடுத்த அழைப்பின் மீது அனைத்து தரப்பும் கவனம் செலுத்த வேண்டும்

நாடளாவிய ரீதியில் கல்விப் பெறுபேறுகளின் அடிப்படையில் எமது வடக்கு மாகாணம் பின்தங்கியுள்ள நிலையில் இருப்பதான புள்ளிவிபரத் தகவல்கள் பலருக்கும் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்து மாணவர்களைப்போல் படிக்க வேண்டும் என்று சிங்கள – முஸ்லிம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுவதான செய்திகளைக் கேட்ட ஓர் இனம், இன்று கல்வியில் வீழ்ச்சி கண்டிருப்பதென்பது வேதனையிலும் வேதனை.

இவ்வாறு வடபுலம், கல்வி வீழ்ச்சி கண்டுள்ளமைக்குக் காரணங்கள் பலவாறாக உள்ளன.

அதில் குறிப்பாக நடந்து முடிந்த யுத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளும் எமது மாணவர்களின் கல்வி வீழ்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றது.

இதனைவிட பல பாடசாலைகள் வெறிச்சோடிக் கிடக்க, ஒரு சில பாடசாலைகளில் மாணவர்கள் குவிந்திருப்பதும் கல்வி வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இங்கு எமது கல்வி வீழ்ச்சியடைகிறது என நாம் அழுது புலம்புவதால் – அறிக்கை விடுவதால் – குற்றச்சாட்டுக்களை மாறி மாறி முன்வைப்பதால் கல்வியில் எந்த முன்னேற்றமும் ஏற்படமாட்டாது.

மாறாக எமது கல்வியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குப் பரிகாரம் தேட வேண்டும்.

அதுவே எங்கள் கல்வி உயர்ச்சிக்கு உதவுவதாக இருக்கும்.

தவிர, வீழ்ச்சியடைந்துள்ள எமது கல்வியைத் தூக்கி நிறுத்தும் பெரும் பொறுப்பை தனித்து கல்வித் திணைக்களத்திடமோ அன்றி பாடசாலைகளிடமோ அல்லது பெற்றோர்களிடமோ மட்டும் விட்டுவிட முடியாது.

மாறாக ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் விழிப்படைய வேண்டும். அனைத்துத் தரப்புகளும் தமது வகிபங்கை ஆற்ற வேண்டும்.

அப்போதுதான் எங்களின் கல்வி எழுச்சி பெறும்.

அந்த வகையில் எமது மாணவர்களின் கல்வி தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை கருசனை கொண்டுள்ளதுடன் அது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த விசேட அறிக்கையில்,

எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கான வகிபாகத்துக்காக அனைத்துத் தரப்பையும் முன்வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

எனவே தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள இந்த அழைப்பை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு உள்ளிட்ட அதன் கட்டமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக சமூகம், உயர் கல்விப் பீடங்கள், மருத்துவ நிபுணர்கள், உளவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், நிறுவனத் தலைவர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், பொது அமைப்புகள், பெற்றோர்கள் என அனைத்துத் தரப்புகளும் தமிழ் மக்கள் பேரவையின் அழைப்பு மீது கவனம் செலுத்தி, எங்கள் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்குப் பேருதவி புரிதல் வேண்டும்.

கல்விக்கான இந்த எழுச்சி சரியான ஒழுங்கில் பயணிக்குமாயின் மீண்டும் எங்கள் கல்வி உயர்வு பெறும். இது சத்தியம்.

# வடமாகாணத்தில் தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(குருமன்காடு)

**வடமாகாணத்தில் காணப்படும் 6000 தொழிலாளர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்கம் என்பன கூட்டாக கோரிக்கை முன்வைத்துள்ளன.**

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்க பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் இடையேயான சந்திப்பு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது மேற்கண்ட விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் 6 ஆயிரம் தொழிலாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வவுனியா நகரசபையை விரைவாக மாநகர சபையாக தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வவுனியா நகரசபையில் உள்ள 11 தொழிலாளர்கள் வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றும் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை.

இதனை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் தனியான பிரதேச சபை ஒன்றை நிறுவுதற்கு அரசாங்கத்துடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும். முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது ஊழியர் சங்க பிரதிநிதிகளினால் வலியுறுத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் கலந்துரையாடி உரிய தீர்வை விரைவில் பெற்றுத் தருவதாக மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் தெரிவித்தார். (ஜ-250)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** நல்லூர் பிரதேசம், கச்சேரி நல்லூர் வீதி, நாயன்மார்கட்டு, கனகரட்ணம் சந்தியிலிருந்து நல்லூர் செட்டித்தெரு வரை, இலந்தைக் குளம், புங்கன்குளம், முல்லை, பூம்புகார், நாவலடி, அரியாலை கிழக்கு, கல்வியங்காட்டு சந்தி, கிளிகடைச் சந்தி, நல்லூர் பூங்கனிச்சோலை, இராமலிங்கம் சந்தி, ஆடியபாதம் வீதி, இராஜ வீதியிலிருந்து கோப்பாய் பொலிஸ் நிலையம் வரை, சட்டநாதர் வீதி, நல்லூர் கோவில் வீதியின் ஒரு பகுதி, சிவன் அம்மன் வீதியின் ஒரு பகுதி, நல்லூர்மாநகர சபை அலுவலகம், நல்லூர் செம்மணி வீதி வட மாகாண கல்வியமைச்சின் அலுவலகம், நாயன்மார்கட்டு **Carlton Sports Network (CSN), SOS** சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி. காங்கேசன்துறை பொலிஸ் நிலையம், சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலை விளான், பலாலி, காங்கேசன்துறை கடற்படைமுகாம், காங்கேசன் துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன் துறை **SLNS Uththara,** பலாலிஇராணுவத்தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி விமான நிலையம், 5வது பொறியியல் படை முகாம் மயிலிட்டி, பலாலி விமானப்படை ஓய்வுக்கால விடுதி, மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம், பலாலிவிமான நிலையம், நாவலடி வியாபாரிமூலை பிரதேசம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஆண்டியப்புளியங்குளம், வாரிக்குட்டியூர், நித்தியநகர், பூவரசங்குளம ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் **Palmyrah house,** கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, **Palmyrah house** கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, **New Silk Road,** தோட்டவெளி, **Timex** ஆடைத்தொழிற்சாலை, **Industrial Estate,** மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடிஇராணுவமுகாம், டயலொக்தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# கிளிநொச்சி தமிழ்ச்சங்க கோட்டநிலை விழாக்கள்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தின் கோட்ட நிலை விழாக்கள் நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்திற்கு அருகிலுள்ள தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வு தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் வே. தபேந்திரன் தலைமையிலும் இரண்டாம் நாள் நிகழ்வு தமிழ்ச் சங்கத் தலைவர் மருத்துவர் மா.ஜெயராசா தலைமையிலும் இடம்பெறவுள்ளது. (ஜ-5-100)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**பெரியவர்களுக்கு மூன்றுமுறை நமஸ்காரம் செய்ய வேண்டும். ஆலயங்களிலும் தெய்வத்துக்கு மூன்று முறை வணக்கம் செலுத்த வேண்டும். திருமாலுக்குமட்டும் நான்கு முறை வணக்கம் செலுத்த வேண்டும். (தொடரும்)**

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**மனம் போன விதத்தில் ஒருவன் பாடத் தொடங்கினால் இனிமை தருவதற்குப் பதிலாக இசையே துன்பமாகிவிடும். அதுபோல ஒழுக்கமில்லாத வாழ்வு தீமைக்கு வழிவகுக்கும்.**

**- கமலாத்மானந்தர்**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விநாயகருக்கு முன் தலையில் குட்டிக்கொள்வது ஏன்?

விநாயகர் சிலை முன்பு நின்று தலையில் குட்டிக் கொள்ளும் பழக்கம் எப்படி தோன்றியது தெரியுமா? இது குறித்து விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

❖ அகத்திய முனிவர் சிவனிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென் திசை நோக்கி வரும்போது குடகுமலையில் சிவபூஜை செய்து கொண்டு இருந்தார்.

அப்போது இந்திரன் சீர்காழியில் பூஜை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது. நாரத முனிவர் இந்திரனை பார்த்து, "அகத்தியருடைய கமண்டலத்தில் உள்ள காவிரி பெருகுமானால் உன் பூங்கா பொலிவு பெறும்" என்று கூறினார்.

❖ இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான். விநாயகர் காக்கை வடிவம் எடுத்து சென்று காவிரி அடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தைக் கரத்தால் துரத்தினார். காகம் காலால் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது. (தொடரும)

# இளைஞர் கழகங்களுக்கிடையிலான

# துடுப்பாட்ட சுற்றுத் தொடர்

## வெற்றி வாகை சூடியது ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம்

உடுவில் பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்ட சுற்றுத்தொடர் கடந்த 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குப்பிழான் விக்னேஸ்வரா மைதானத்தில் ஆரம்பமானது.

11 அணிகள் பங்கு பற்றிய இத்தொடரில் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் இறுதிப் போட்டி வரை சென்று சம்பியனாகி வெற்றிவாகை சூடிக்கொண்டது ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

முதலில் நடை பெற்ற காலிறுதி போட்டியில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் தாவடி காளியம்பாள் விளை யாட்டுக் கழகமும் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் இரண்டு இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ஆதித்தன்-ஆட்டமிழக்காமல் 7 சிக்சர்கள் அடங்கலாக 54 ஓட்டங்களையும் மறுபுறம் ஜஸ்மினன் 3 சிக் சர்கள் ஒரு பவுண்டரி அடங்க லாக 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு 96 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் 4 விக்கெட்டுக்களை இழந்து வெறும் 28 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

இதன்படி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்ற ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் குப்பிழான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குப்பிழான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் 2 விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் 4.1 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ஆதித்தன் ஒரு சிக்சர் 2 பவுண்டரியுடன் 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். மறுபுறம் ஜஸ்மினன் **13** ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.



ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய ஆதித்தன்-ஜஸ்மினன் ஜோடி மீண்டும் வானவேடிக்கை காட்டியது.

இதில் ஆதித்தன் 6 சிக்சர்கள் உள்ளடங்கலாக 41 ஓட்டங்களையும் ஜஸ்மினன் 2 சிக்சர்கள் உள்ளடங்கலாக ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் சுஜீவன் 3 சிக்சர்கள் உள்ளடங்கலாக ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்கு 88 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இறுதியில் 4 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று இவ் வருடத்திற்கான உடுவில் பிரதேச செயலகத்தின் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத் சுற்றுத் தொடரின் சம்பியனாக வெற்றிவாகை சூடியது ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம். (4)

# நொதேன் பிறீமியர் லீக்- 2k20

## கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- இனுவில் யுனைடெட் ஸ்ரார்ஸ் எதிர் சங்கானை றொப் II.
- இனுவில் யுனைடெட் - 69/9.
- சங்கானை றொப் II - 70/3.
- சங்கானை றொப் II 7 விக்கெட்டுகளால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சூர்யா - 41 ஓட்டங்கள்.



- நோர்த் சுப்பீரியர்ஸ் எதிர் நோ நேம் கிரிக்கெட் கிளப்.
- நோ நேம் கிளப் - 90/10.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 74/8.
- நோ நேம் கிளப் 16 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - நிரோஜன் - 3 விக்கெட்டுகள்.



- இனுவில் யுனைடெட் ஸ்ரார்ஸ் எதிர் நோர்த் சுப்பீரியர்ஸ்.
- இனுவில் யுனைடெட் - 14/10.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 17/00.
- நோர்த் சுப்பீரியர்ஸ் 10 விக்கெட்டுகளால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சுஜீந்தன் - 4 விக்கெட்டுகள்.



- நோ நேம் கிரிக்கெட் கிளப் எதிர் வல்வை றைனோஸ்.
- நோ நேம் கிளப் - 91/10.
- வல்வை றைனோஸ் - 81/09.
- நோ நேம் கிளப் 10 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - உமைசுதன் - 27 ஓட்டங்கள்.

## இளம் குடும்பஸ்...

மாக மீட்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய தங்கவேல் சிவகுமார் என்ற இளம் குடும்பஸ்தர் ஆவார்.

குறித்த குடும்பஸ்தர் திருமணம் முடித்து ஒருவருடமாகிய நிலையில் மனைவியுடன் பிரிந்து தனியாக வாழ்ந்து வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,250,299)

## விசேட வர்த்த...

மானியில் நேற்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20ஆம் திருத்தச் சட்டமூல வரைபுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள நிலையில், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து 20ஆம் திருத்தச் சட்டமூல வரைபானது அரச அச்சக திணைக்களத்துக்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்காக அனுப்பப்பட்டிருந்த நிலையில் நேற்று விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## விக்னேஸ்வர...

எடுக்க வேண்டுமென, சட்டத்தரணி தர்சன வெரதுவேஜ் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சமூகங்களிடையே இன அல்லது மத வெறுப்பைத் தூண்டும் வகையில் ஊடகங்களுக்கு அறிக்கைகளை வழங்கியதற்காக விக்னேஸ்வரன் மீது அவர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

ஓகஸ்ட் 30 அன்று இரண்டு தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பிய நிகழ்ச்சிகளின் மூலம் விக்னேஸ்வரன் மோசமான கருத்துக்களை வெளியிட்டதாக தர்ஷன வெரதுவேஜ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல என்று விக்னேஸ்வரன் கூறியதாக அந்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற நீதியரசரான சி.வி.விக்னேஸ்வரன் இலங்கை இராணுவத்திற்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியதாகவும், வடக்கு மாகாணத்தில் புத்தர் சிலைகள் தன்னிச்சையாக நிறுவப்படுவதாகக் கூறி விக்னேஸ்வரனும் ஒரு அறிக்கையை வெளியிட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை (ஐ.சி.சி.பி.ஆர்) சட்டம் எண் 3 (1) இன் கீழ், 2007 இன் 56, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (1) (எச்) மற்றும் தண்டனைச் சட்டத்தின் 120 மற்றும் 290 (பி) பிரிவுகளின் கீழ் விக்னேஸ்வரன் தண்டனைக்குரிய குற்றங்களை செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விக்னேஸ்வரனுக்கு எதிராக உடனடியாக விசாரணையைத் தொடங்கவும், அவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி முறைப்பாடு தெரிவித்துள்ளார். (ம-3)

## 19ஆவது திருத்...

கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை மேம்படுத்தவே நாங்கள் 19ஆவது திருத்தத்தை உருவாக்கினோம். தற்போதைய அரசு இதனை ஒழிக்க முயல்கிறதென அவர் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் தனது அலுவலகத்தை திறந்து வைத்த பின் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு மேலும் பேசிய அவர், எந்த மோசமான ஆட்சியாளர்களை வீழ்த்தினோமோ, அவர்கள் அதை விட அதிக பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ளனர்.

19ஆவது திருத்தத்தை அகற்றுவது நாட்டை மோசமான ஜனநாயக பாதையிலே கொண்டு செல்லும் வழி. இது நாட்டுக்கு கேடு, ஜனநாயக விரோதச் செயல், இதை நாங்கள் எதிர்ப்போம் என்பதை அரசுக்கு சொல்லிவைக்க விரும்புகிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பிரதேச செயலக...

தில் திடீரென தீ பற்றி எரிய ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து சென்று தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். (ம-3,281)

## வடக்கு மாகாண...

ராட்சி அமைச்சின் செயலாளரான திருமதி சரஸ்வதி மோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் ஏற்படும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வெற்றிடத்திற்கு தற்போதைய மகளிர் விவகார அமைச்சின் செயலாளரான வரதீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மகளிர் விவகார அமைச்சின் செயலாளராக தற்போதைய பேரவைச் செயலக செயலாளரான ரூபினி வரதலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதோடு பேரவைச் செயலகத்திற்கும் அவர் பதில் கடமையாக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## கஜேந்திரகுமார்...

வரும் வீட்டில் தென்னிலங்கை தொழிலாளி ஒருவர் மேல் தளத்திலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நல்லூர் குறுக்குத் தெருவில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

இதில் காலியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்துனில (வயது -38) என்ற தொழிலாளியே உயிரிழந்தவராவார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக அமைத்து வரும் வீட்டில் கூரை வேலையில் ஈடுபட காலியிலிருந்து அழைத்து வரப்பட்ட ஐவரில் ஒருவர், நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மேல் தளத்துக்குச் சென்ற நிலையில் தவறி விழுந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணைகள் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

பொலிஸ் விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 13ஆவது திருத்...

புத் திருத்தத்திலேயே அதை உட்புகுத்தினால் ஜே.வி.வி முழுமையாக ஆதரவளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (ம-3)

## கொக்குவிலில்...

டன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவிலில் வீடொன்றில் ஹெரோயின் விற்பனை இடம்பெறுவதாக விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அந்த வீடு சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது வீட்டில் வைத்து ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதன்போது 530 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-3)

## நேற்...

இதேவேளை, நேற்றையதினம் மேலும் 06 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ள நிலையில் பூரணமாக குணமடைந்தோரின் எண்ணிக்கை 2889 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது, 210 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளான 12 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாராளுமன்றை...

சிவில் அமைப்பு பிரதிநிதிகள் மூவர் உள்வாங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது சிவில் பிரதிநிதிகள் நீக்கப்பட்டுள்ளனர்.

19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருந்தன. 20ஆவது திருத்தத்தில் அது தொடர்பில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என்ற விடயம் 20 ஆவது திருத்தத்தில் மாற்றப்பட்டு, ஜனாதிபதியும் அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியும் என்ற விடயம் உள்வாங்கப்பட்டுள்ளது.

பிரதமரின் சிபாரிசின் அடிப்படையில் அமைச்சர்களை நியமிக்க முடியும் என்ற விடயம் மாற்றப்பட்டு, ஜனாதிபதியாலும் அமைச்சர்களை நியமிக்க முடியும் என்ற விடயம் உள்வாங்கப்பட்டுள்ளது.

19 ஆவது திருத்தத்தில் உள்ளவாறு இரட்டைப் பிரஜாவுரிமை உள்ள ஒருவருக்கு பாராளுமன்றம் செல்ல முடியாது என்ற விடயம் திருத்தப்பட்டு, அவ்வாறானவர்கள் பாராளுமன்றம் செல்ல முடியும் எனும் விடயம் உள் 02




















விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
2020 தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM
செப்ரம்பர் 5,6,7 பொறியியல் தொழில்நுட்பவியல்
P.சண்முகநாதன் S.சதீஸ்குமார் K.ரவிக்குமார் R.சிவரூபன் R.நிருஜன் P.கணேஷ்
செப்ரம்பர் 5,6,7 உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
M.விஷ்ணுதேவன் R.நிருஜன் P.நிரோஜன் K.ரவிக்குமார்
இம்முறை COVID - 19 தாக்கத்தால் இருந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860


# மாசியப்பிட்டியில் இருவர் கைது

சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியில் வீடொன்றில் 8 அலைபேசிகளை திருடிய குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய், மாசியப்பிட்டியில் வீடொன்றில் கடந்த வாரம் பகல் வேளை வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த நிலையில் 8 அலைபேசிகள் திருட்டுப் போயிருந்தன.

அதுதொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் வீட்டில் குடியிருந்தவரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் மாசியப்பிட்டியைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.(ம-03)


வாடகைக்கு வீடு தேவை
2 அல்லது 3 அறைகள், குளியல் கழிவறையுடன் பிரதான வீதியிலிருந்து நல்லூர் சுற்று வட்டாரத்திற்குள் விரும்பத்தக்கது.
தொடர்பு
071 813 6824 / 077 633 3683

AMC ACADAMY
BMC LANE, CLOCK TOWER ROAD.
AAT, CA, CIMA, ACCA BANKING CLASSES
◆ பதிவுகள், பரீட்சை ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.
ஆரம்பம் : 05.09.2020 சனி
காலை : 9.00 மணி
Tel : 077 694 4543

AMC ACADAMY
BMC LANE, CLOCK TOWER ROAD.
◆ போட்டிப் பரீட்சை
MSO, Law College, Railway Station Master, SLAS, SLEAS.
வகுப்புக்கள் :-
சனி காலை 8.30 - 1.30
ஞாயிறு காலை 8.30 - 1.30
Tel : 077 694 4543

மீண்டும்
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்
◆ முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
◆ புகையிரத நிலைய அதிபர்
பிரிவு - 1 சனி 9.30 am
பிரிவு - 2 ஞாயிறு 9.30 am
Central Bank MA
சனி, ஞாயிறு 9.30 am
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி முன் வீதியில் BOC ATM எதிரில்.)

வெகு விரைவில்...
A/L - 2020
மாணவர்களுக்கான
ஆசிரியர்
N.BABU வின்
புவியியல் கருத்தரங்கு
(வெளிமாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.)
DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 077 936 5087

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
(இருபாலாரும்)
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி கொடிகாமம் கோண்டாவில் சுன்னாகம் மானிப்பாய் பருத்தித்துறை வல்வெட்டித்துறை புத்தூர்
● பயிற்சிக்கால கொடுப்பனவு -10'000/-
● ஆரம்ப சம்பளம் -15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
இலவச கருத்தரங்கு-2020
A/L தொழில்நுட்பபிரிவு
September - 5,6
8.00am - 2.30pm
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ஆசிரியர்கள்
சக்தி, முருகநிறோஜன், ராகவன், லவேந்திரன்
அனுமதி இலவசம்
(Full model papers - 01)
(50Mcq, 4 Structure and 6 Essay)
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
077 017 5346, 077 170 3549

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்..!
டிஜிற்றல் பனர்
~~70/-~~ 35/- (சதுர அடி)
50% OFF
டிஜிற்றல் ஸ்ரிக்கர்
~~120/-~~ 80/- (சதுர அடி)
3D விளம்பரப்பலகைகள்
1 சதுர அடி 1800/- இலிருந்து
இச் சலுகை 31.12.2020 மட்டுமே.
ANDRA ADVERTISING
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel : 021 222 8929
0777 481 696 / 077 220 9527


# மரண அறிவித்தல்

## தம்பிராசா மனோகரன்



தோற்றம் : 05.04.1968
மறைவு : 02.09.2020

தோணிக்கல் வவுனியாவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா மனோகரன் 02.09.2020 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பத்மாதேவி தம்பதியரின் மகனும் சிவகுமாரியின் அன்புக் கணவரும் எரோண், அறிக்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்காதரன் (சுவிஸ்), தவறஜனி (சுவிஸ்), தயாளினி, அமுதாகரன் (கனடா), சசிகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமேஸ்வரலிங்கம் (சுவிஸ்), ரமணி (சுவிஸ்), சிவானந்தன், ரதீபா (கனடா), வினோஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் அரவிந் (சுவிஸ்), அஜித் (சுவிஸ்), செந்தூரன் (பிரான்ஸ்), தர்சனா ஆகியோரின் மாமனாரும் கீர்த்தன் (சுவிஸ்), ஆர்த்திகா (சுவிஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் அஷிஷ் (கனடா), அனோஜ் (கனடா), அஸ்வின் (கனடா), அஸ்விகா (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 07.09.2020 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
தர்மலிங்கம் சிவானந்தன்
சண்டிலிப்பாய் வடக்கு 021 224 0297

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.